AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 21

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை
வெளிவரும்
ஜூலை 1 முதல்
15 வரை

ஆன்மீக
விஞ்ஞான
இதழ்



## ஆனந்தம் அள்ளி வழங்கும் சில ஆஞ்சநேயத் தலங்கள்!

- வியப்பூட்டும் மகான்கள்!
- கடன் சுமையை தீர்க்கும் எந்திரம்
- விதி வழியது வாழ்வா?
- மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நமது நாட்டில் வறுமை என்னும் கொடிய நோய் ஆட்டிப் படைக்கிறது. இல்லாமையால் பல கோடி பேர் அல்லாடும் நிலையில் சிலர் மட்டும் செல்வச்செழிப்பில் மிதக்கின்றனர்! இதற்குக் காரணம், மனதில் முன்னேற வேண்டும் என்ற முனைப்பு ஒரு நோன்பு போல நம்மிடம் இருக்க வேண்டும். நமக்கு எது தேவையோ அதை மனதால் அனுதினமும் தியானிக்க வேண்டும். அதை நம் மனதில் நினைத்து உருப்போடுகிறோமோ அது நிச்சயம் ஒரு நாள் உருப் பெறும் என்பது உறுதி!

இது தான் நம் தலைவிதி என்று உழைத்துக் கொண்டே இருப்பதை விட, ஒரு நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, அதை எண்ணத்தில் கொண்டு உழைக்க வேண்டும். அதே எண்ணத்திற்கு நாம் இயங்கினால் நிச்சயம், நோக்கம் நிறைவேறும்! திருவள்ளுவர் இதே கருத்தைத் தான் வலியுறுத்திக்கிறார். எனவே, உறுதியே உயர்வைத் தரும்.

~ Dr. Baskaran Pillai

ஆன்மீக அன்பர்கள் அனைவருக்கும் சத்வித்யாவின் வணக்கங்கள் உரித்தாகுக! மண்ணில் அனைவரும் நல்ல வண்ணம் வாழ மகேசன் அருள் புரியட்டும்! ஆணி அடித்தாற் போல் அவதிப்படுத்திக் கொண்டிருக்கும் கொடிய நோய்கள் இந்த "ஆனியோடு ஒழியட்டும்!

அம்பாளின் புகழ்பாடும் ஆடி பிறந்து, மக்கள் அனைவரும் ஆனந்தக் கடலில் நீந்திக் களிக்கும் புத்துணர்வைப் பெற வேண்டும்!

பிறக்கப் போகும் ஆடி, இதுவரை நமக்கு ஆட்டம் காட்டிய கொரோனாவை அடங்கச் செய்யட்டும்! வேளாண்மை சிறந்து, தொழில் வளம் உயர்ந்து, அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகி, எல்லோரும் நிம்மதியடைய வேண்டும்.





அடைப்பட்டு கிடக்கும் ஆண்டவனின் திருக் கோவில்கள் அனைத்திலும் அருள் வெள்ளம் பொங்கிப் பெருகி, ஆன்மீக சுடரொளி பிரகாசம் காட்டி, பக்தி நெறி ஓங்கி, பாவங்கள் தொலைந்து, புண்ணியம் பெருகட்டும்! இறையருளால் இனியேனும் மாந்தர், இன்பப் புன்னகை புரிய, எல்லாம் வல்ல இறைவன் ஆசி வழங்கட்டும் என வேண்டுகிறோம்.

(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# கூகையூர் அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில்

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் சின்ன சேலம் அருகே கூகையூரில் இந்த அற்புத திருத்தலம் அமைந்துள்ளது.
இத்தல இறைவனின் திருப்பெயர் அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர். அம்பிகையின் பெயர் அருள்மிகு பெரியநாயகி.



அருள்மிகு பெரியநாயகி உடனுறை அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயிலை காணக் கண் கோடி வேண்டும். தல விருட்சம் யாதெனில் நெல்லி மரமாகும். தல தீர்த்தம் நிவா ஆகும்.
இத்தலம் மிகமிக தொன்மையான சிவாலயம். தரிசிப்பதற்கு மிகவும் மகிழ்வும் அமைதியும், ஆனந்தமும் தருகின்ற அற்புத திருத்தலம்.

மிகச் சிறந்த மாமுனிவரும், சிவனருள் பெற்ற மகரிஷியான வசிஷ்டர் மிகுந்த பக்தியுடன் பிரதிஷ்டை செய்த சிவலிங்கம் அற்புதமாக அமைந்துள்ளது என்பது கூடுதல் சிறப்பு.

மூன்றாம் குலோத்துங்க சோழ மாமன்னனால் மிகுந்த கலை வேலைப்பாடுகளுடன் கட்டப் பெற்ற கற்கோயில் இத்தலமாகும். நவகோள்களில் ஒருவரான வியாழபகவான் மிகுந்த பக்தியுடன் வழிபட்ட தலம். ஈசனை அடைய முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் அன்னை பகவதி நித்தம் தவம் செய்தும். காஞ்சியில் ஊசி முனையில் தவம் இருந்தும், கடலூர் திருப்பாதிரிபுலியூரில் பாதிரி மரத்தின் கீழ் அருந்தவநாயகியாக பெரியநாயகி அம்மன் கடுந்தவம் இருந்தும் ஈசனை அடைந்தாள் மகேஸ்வரி உலகம்மை.

கூகையூர் அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக் கோயிலிலும் அன்னை பராசக்தி அம்பிகை உலக உயிர்கள் உய்ய வேண்டியும், அடியவர்களுக்காகவும் அம்பிகையே 108 சிவ லிங்கங்களை நிறுவி வழிபடுகின்றாள்.

இத்தலத்தில் இராகு காலத்தில் வெள்ளிக் கிழமைகளில் இத்தலத்தில் எழுந்தருளி உள்ள துர்க்கைக்கு திரு விளக்கு ஏற்றி மனமுருக இளம் பெண்கள் வழிபட்டால் இனிய இல்லறம் வாய்க்கும். பதினாறு பேறும் பெற இத்தல இறைவனையும் இறைவியையும் மனமுருக வழிபடலாம்.

இக்கோயிலின் வடமேற்கில் 200 மீட்டர் தொலைவில் அருள்மிகு சோழீசுவரர் திருக் கோயில் அமைந்து அருள் பாலிக்கின்றது. இது சோழர்கால கோயிலாகும்.

இக் கோயிலின் அருகே வட வெள்ளாற்றின் வடக்கு கரையில் அருள்மிகு பஞ்சாட்சர நாதர் கோயில் அமைந்துள்ளது.

இக் கோயிலின் கர்ப்பக் கிரஹத்திற்கு வெளியே தென் மேற்கு மூலையில் சித்தர் கோயில் ஒன்று உள்ளது. இதன் காரணமாக மக்கள் அருள்மிகு பஞ்சாட்சர நாதர் கோயிலை சித்த நாதர் கோயில் என்றே அழைக்கின்றனர்.

அஷ்டமாசித்திகள் கூட கை வரப் பெறலாம். சித்த நாதர் எனப்பெறும் ஸ்ரீ பஞ்சாட்சர நாதர் கோயிலை வழிபட்டால் என்பது நிதர்சனமான உண்மை. மிகச் சிறந்த தமிழ் மா முனிவர் இத்தலத்தில் 103 அகவை வரை வாழ்ந்த அடியவர் அவர் பெயர் அடிகளாசிரியர் மிகச் சிறந்த சிவ நேயச்செல்வர். மிகப் பெரிய தமிழ்க் கடல். முதல் செம்மொழி தேசிய விருது இவருக்கு கிடைத்து தம் நூறு வயது கடந்த நிலையில் டெல்லி சென்று பெற்றுவந்தவர்.

தம் 103 ஆம் அகவையில் சிவனோடு ஐக்கியமானார். இவர் அரும்பெரும் முயற்சிகளால் கூகையூர் சிவாலயங்கள் பொலிவுடன் அருட்காட்சி தந்து கொண்டிருக்கின்றன. நாமும் தரிசிப்போம். சிவனருள் பெறுவோம்.


எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்





உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701

# பிள்ளையார் பிடித்து வைத்து வணங்குவதால் ஏற்படும் பலன்கள்

முழு முதற்கடவுளான பிள்ளையாரை வணங்கியே அனைத்து காரியங்களையும் தொடங்குவது தொன்று தொட்டு வரும் மரபு. பிள்ளையாரை வணங்கினால், துன்பங்கள் தொலைந்தோடும், பாதகங்கள் சாதகமாகும்.

பிள்ளையார் எளியோருக்கும், எளியர், அடியாருக்கு அடியார். நினைத்த நேரத்தில் பிள்ளையாரப்பா! என்றவுடன் ஓடோடி வந்து வினைகளை தீர்ப்பவர்....
பிள்ளையாரை மஞ்சள், சாணம், சந்தனம், மற்றும் எதில் வேண்டுமானாலும் எளிதில் ஆவாகணம்



செய்திடலாம். அவ்வளவு எளிமையானவர் இந்த பிள்ளையார்.

எல்லா பிள்ளையாரும் ஒன்றென்றாலும் எந்தெந்த பொருளில் பிள்ளையார் பிடிக்குறோமோ அதற்கேற்றவாறு பலன் கிடைக்கும்.
நாம் பிடிக்கும் பிள்ளையாரில், எந்தவித நன்மை என்பதை தெரிந்து கொள்வோம்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வழிபட சகல சௌபாக்கியமும் கிடைக்கும். காரிய சித்தி தருவார். குங்குமத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்க செவ்வாய் தோஷம் அகலும், குழந்தைகளைப் படிப்பில் வல்லவராக்குவார்.

புற்று மண்ணினால் பிள்ளையார் செய்து வணங்க நோய்கள் அகலும்,விவசாயம் செழிக்கும், வியாபாரத்தை பெருக வைப்பார்.
வெல்லத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் உடலில் உள்ளேயும், வெளியேயும் உள்ள கட்டிகள் (கொப்பளம்) கரையும்.

உப்பினால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் எதிரிகளின் தொல்லை நீங்கும், எதிரிகளும் நண்பராவார்கள்.
வெள்ளை எருக்கில் பிள்ளையார் செய்து வணங்கினால் பில்லி, சூனியம் விலகும், செல்வம் அதிகரிக்கும்.




விபூதியால் விநாயகர் பிடித்து வழிபட்டால் உஷ்ண நோய்கள் நீங்கும்.
சந்தனத்தால் பிள்ளையார் செய்து வழிபட்டால் சந்தான பாக்கியம் கிடைக்கும்.
சர்க்கரையில் பிள்ளையார் செய்து வழிபட சர்க்கரை நோயின் வீரியம் குறையும்.
வாழைப் பழத்தில் பிள்ளையார் செய்து வழிபட்டால் வம்ச விருத்தி உண்டாகும்.
வெண்ணெயில் பிள்ளையார் செய்து வழிபட்டால் கடன் தொல்லை நீங்கும்.
பசுஞ்சாண பிள்ளையார் செய்து வழிபட்டால் சகல தோஷமும் விலகி, வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வழி வகுக்கும், மற்றும் உடல் உபாதைகள் நீங்கும்.

~ சு.சேகர்
திருவாரூர்

## மூலிகை ரகசியம்

# வசம்பு

பண்டைய காலந்தொட்டு இன்று வரை ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய ஒப்பற்ற மூலிகை வசம்பு. பாட்டி வைத்தியத்தில் தவறாமல் இடம் பெறும் இந்த வசம்புக்கு நிகரே இல்லை.



குழந்தைகள் முதல் முதியோர் வரை உள்ள அனைத்து வயதினருக்கும் பயனளிக்கும் மூலிகை இது! இதனை சுட்டு பயன்படுத்தினால் குழந்தைகளுக்கு நலம் தரும் என்பது சித்த மருத்துவத்தில் காணப்படும் குறிப்பாகும்.

சதுப்பு நிலம், களி மண் பூமி, நீர்ப் பிடிப்புள்ள ஆற்றங்கரை, ஏரிக்கரை போன்ற பகுதிகளில் வளரும் இதன் இலைகள், நீண்டதாய் 2 முதல் 3 அடி உயரம் கொண்டதாய் இருக்கும். இது இஞ்சி வகையைச் சார்ந்தது. காரமான சுவையும் வெப்பத் தன்மையும் கொண்டது வசம்பு இதனுடைய பயன்பாடு கருதி இதற்கு பிள்ளை வளர்ப்பான், உரைப்பான், பேர் சொல்ல மருந்து என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இது எந்தெந்த நோய்களுக்கு மருந்தாகிறது. இதனை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதனை பார்ப்போம்.

### வசம்பின் பயன்பாடுகள்:

தேள், பூரான் போன்ற விஷக்கடிகள், பசியின்மை, தொற்று, வயிற்றுப் பூச்சி, வாயுக் கோளாறு, தொண்டைக் கட்டு, ஜலதோஷம், இருமல், வாந்தி, போன்றவற்றை தடுக்கும் ஆற்றல் வசம்பில் உண்டு!

### பயன்படுத்தும் முறை:

வசம்பை பொடியாக்கி, மஞ்சள் சேர்த்து, சிறிது நீர் விட்டு அரைத்து கடிவாயில் பூச அல்லது உள்ளுக்கு 10 மி.லி. கொடுக்க விஷக் கடிகள் இறங்கும். பொடுகுத் தொல்லையும் தீரும்.

வசம்பை சூடாக்கி பாலில் கலந்து கொடுக்க, குழந்தைகளுக்கு ஏற்படும் பசியின்மை, வயிற்று உப்புசம், வாயுக் கோளாறு, வயிற்றுப் பூச்சிகள் விலகும்.

வசம்பை பொடி செய்து கால் ஸ்பூன் எடுத்து வெந்நீரில் கலந்து பருகினால் தொண்டைக் கட்டு, ஜலதோஷம் குணமாகும். சோம்பலை நீக்கும்

வசம்பு பொடியை சிறிதளவு வாயில் போட்டு வெந்நீர் குடித்தால் பிரயாணத்தின் போது ஏற்படும் வாந்தியை தடுக்கலாம்.

இப்படி எண்ணற்ற நன்மைகள் கொண்ட இந்த வசம்பு எல்லோரது இல்லத்திலும் இருத்தல் நலம். இதனை பயன்படுத்தி நோய்களை தவிர்க்கலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# பாலும் தமிழ்ப் பாவும்!

மனிதர்களில் பல வகை உண்டு. அவர்கள் கொண்ட அன்பால், பண்பால், குணத்தால் வேறுபடுவார்கள். அவர்கள் நடத்தையும், அந்தக் குணங்களுக்கு தக்க படி வித்தியாசமாக இருக்கும்.

இப்படி மிருகங்களின் கொடையான பாலும் அமைந்திருக்கும். ஆனால் அப்பால் எவருக்கும் நன்மையைத் தருமே அன்றி தீயவற்றை தராது.

இப்படி சில பால்களின் "பண்பை" க் காணலாம்.

### பசும் பால்

இளங்குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் உணவான பசும் பால் மருத்துவக் குணமும் கொண்டுள்ளது் பிரமேகம், விரணம் போன்ற வியாதிகளையும் பசும் பால் குணப்படுத்தும்!

அதனை விளக்கும் பழைய தமிழ்ப்பா" இது!

"பாலர் கிழவர் பழஞ்சுரத்தோர் புண்ணாளி
சூலையர், மேகத் தோர் துற்பலத்தோர் - ஏழுமிவர் எல்லார்க்கு மாகு மிளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின் பால் நாட்டு"

## காராம் பசு பால்

நாம் கொண்ட கண் நோய்கள், காச நோய், பிற பால் அருந்தியதால் ஏற்பட்ட தோஷங்கள், ரத்தபித்த நோய் ஆகியவற்றை அழிப்பதோடு பிறரை வசியப்படுத்தவும் காராம் பசுவின் பால் பயன்படும்.

அதற்குரிய பாட்டு

"கண்ணோயகற்றுங் கயரோகந்தான் போக்கு
மண்ணிலுள்ள பால் தோஷம் மாற்றுங்காண் - பெண்ணே இரத்த பித்தம் போக்கு மிராச வசியமாகும்
கறுத்த பசும் பாலதனைக்காண்"

## வெள்ளாட்டுப் பால்

மனிதரைப் பற்றியுள்ள வாத, கபந்தங்கள் தொடர்புடைய வியாதிகளைப் போக்கும். தவிர மஞ்சள் காமாலை நோயால் அவதியுறுவோர் வெள்ளாட்டுப் பாலை தினமும் அருந்தி வர, படிப்படியாய் அந்நோய் நீங்கி விடும்.

அதற்குரிய பாடல்

"வெள்ளாட்டு பாலுக்கு மேவிய நற்றீ பனமார்
தள்ளாட்டு வாத பித்தஞ் சாந்தமாம் - உள்ளிரைப்புச்
சீத மதி சாரஞ் சிலேஷ்ம மறும் புண்ணாறும் வாத கிலேசமும் போ மாய்ந்து"

## கழுதைப் பால்

அதிக ருசி கொண்டது கழுதைப் பால். இதனை அருந்துவதால் வாத நோய், எட்டுவதை கரப்பான் நோய்கள், புண், சீழ்பிரமேகம், சொரி, சிறங்கு கட்டி குணமாகிவிடும்.

"கழுதைப் பால் வாதங் கரப்பான் விரணந்
தழு தளையுள் வித்திரதி தானே யெழுகின்ற
ஒட்டிய புண் சீழ் மேகமோடு சொறி சிறங்கு
கட்டியிவை போக்குங்கழறு."

எக்காரணம் கொண்டும் எருமைப் பாலை மருத்துவத்திற்கு பயன்படுத்த மாட்டார்கள். ஏனென்றால் அது நம் உடலை பருக்கச் செய்வதுடன் திமிர் வாயுவையும் தந்து விடும் இயல்புடையது என்பதால்.

~ கீதாமணி

# விதி வழியது வாழ்வா?

விதியானது உண்மையா? விதி வழியது வாழ்வா? எல்லாம் விதிப்படி தான் என்பது தான் முடிந்த முடிபா? இறையருளால் இதை சிந்திப்போம்.

விதி விளையாடி விட்டது. எல்லாம் தலை விதி என்று கூறுவது இயலாமையின் உச்சம். இருவினைகள் பற்றி அருளாளர்கள் எவ்வளவோ விளக்கங்கள் அளித்து விட்டார்கள். நல் வினைகள் தீ வினைகள் என பகுத்துள்ளனர். இரு வினைகளுக்கு ஏற்ப பிறவிகள் உண்டு என்பதும் நம்பிக்கை.



விதியை மதியால் வெல்லலாம் என்றால் என்ன? மதியார்? சந்திரன்! பிறை சூடிய பெருமானை வழிபட்டால் விதியைக் கூட வெல்லலாம்.

பதினாறு வயது வரைதான் வாழ்வான் மார்க்கண்டேயன் என்று விதி வகுத்தது ஈசனை சரண் அடைந்தான் மார்க்கண்டேயன்! என்றும் பதினாறாக மாற்றியவன் ஈசன்! விதி வென்றதா? மதி வென்றதா?

விதியை நினைத்து கதி கலங்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லாம் நன்மைக்கே என்று வாழத் தலைப்பட்டால் எல்லாம் இனிதாக அமையும்.

அனைத்து வளங்களையும் தந்து விட்டான் ஈசன் அதை பயன்படுத்த நம் மதியை கூர்மையாக்க வேண்டும்.

ஏன்? எதற்கு? எப்படி? என்று ஆராய்வதோடு நில்லாமல் நம் வாழ்வின் உயர்விற்கு இருக்கின்ற வளங்களை மாசுபடுத்தாமல் தன்னல உணர்வின்றி எவ்வுயிரும் தம்முயிரே என்று கருதி வாழும் போது எந்த விதியும் ஒன்றும் செய்யாது.

ஆசை மிகும் போதுதான் அல்லல்கள் அதிகரிக்கும்
"ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடு
ஆயினும் ஆசை அறுமின்" என்பது அருளாளர்களின் அருள் வாக்காகும்.
ஆசை தீர வாழும் வாழ்கை அல்லல் தரும் வாழ்க்கை. ஆசை என்றும் தீரப் போவதில்லை அலைச்சல் தான் கண்ட பலன்.

மண்ணாசையால் அழிந்தனர் கௌரவர்கள் பெண்ணாசையால் அழிந்தான் இராவணன். மகாபாரதமும், இராமாயணமும் இரு பெரும் இதிகாசங்களும் மனித குலத்திற்கு எழுந்த உயரிய "கலங்கரை விளக்கங்கள்" என்றால் அது மிகையாகாது.

ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதை வாயிலாக அர்ஜுனனுக்கு மட்டும் உபதேசிக்கப்பட்டதல்ல மனித குலத்திற்கு வழங்கப் பெற்ற அருளுரை. தர்ம நெறிப்படி வாழ்கிற வாழ்க்கையே தவ வாழ்க்கையாகும். நாம் எதை செய்தாலும் ஈசனுக்கு செய்கிறோம் என்ற உணர்வுடன் செய்தல் வேண்டும். சர்வமும் ஈஸ்வர அர்ப்பணத்துடன் செய்யும் செயல் நன்கு அமைய வேண்டும்.

ஈசனருளால் ஒரு தாயின் மணி வயிற்றில் இருந்து பிறந்து - பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்து - இளைஞனாகி - அனைத்தையும் அனுபவித்து மூப்பு அடையும் போது வாழ்வை நிறைவு செய்கின்றோம். அழுதபடி பிறக்கின்றோம் பிறரை அழ வைத்து இறக்கின்றோம். பிறப்பும் இறப்பும் நம் கரங்களில் இல்லை.

எல்லாம் இறைவன் கரங்களில் உள்ளது. நடந்தவைகள் மீண்டும் நடவாது.
நடப்பவைகளும் நிலைக்காது நீர்க்குமிழி போன்ற இந்த வாழ்க்கையில் போட்டி, பொறாமைகள், பொய், களவு, பழி - புண்பட பேசுதல் - துரோகம் பிற உயிர்களை துன்புறுத்தல் - வஞ்சகம், விரோதம் என கொடிய பாவங்களை ஏன் செய்ய வேண்டும்?

கடவுள் கொடுத்த கரங்களால் எளியோருக்கு உதவுவோம்.
கடவுள் கொடுத்த மனத்தால் நல்லதையே சிந்திப்போம்.
கடவுள் கொடுத்த வாழ்க்கையை பிறருக்காக வாழ்வோம்.
கடவுள் கொடுத்த மொழியால் நல்லதையே பேசுவோம்.

எல்லாம் இறைவன் செயல்! நாம் வெறும் கருவி என்று வாழ முற்பட்டால் விதியை வாழ்வில் மட்டுமல்ல அகராதியில் இருந்து கூட விரட்டி விடலாம்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# மானக்கஞ்சாற நாயனார்

முன்னொரு காலத்தில்...

கஞ்சாறு என அழைக்கப்பட்ட, தற்போதைய கஞ்சனூரில் அவதரித்தவர் மானக்கஞ்சாறர் எனப்படும் சிவபக்தர் ஆவார், இவரை மானக்கந்தன் என்றும் அழைப்பார்கள். குறுநில மன்னர்களின் சேனாதிபதியாக பணியாற்றும் வேளாண்குடி மரபில் வந்தவர், இந்த மானக்கஞ்சாறர்!

இந்த இதழில்.... நாயன்மார் வரலாற்றில்.. சேனாதிபதியான மானக்கஞ்சாறர், சிவபக்தியில் திளைத்து நாயன்மார் வரிசையில் வைக்கப்படும் அளவிற்கு சிவனருள் பெற்றது எப்படி என்னும் வரலாற்றினை அறிவோம்!

ஒரு நாள்....
அந்த சிவாலயத்தில் கூட்டம் அதிகமாக இருந்தத்து அவ்வளவு கூட்டம் அலைமோதிய போதும் கூச்சல், கோஷம் எதுவுமின்றி ஆலயமே அமைதியுடன் விளங்கியது, அனைவருக்குமே ஆச்சர்யத்தை அளிப்பதாய் இருந்தது!

காரணம் என்ன?...
ஆலய கோபுரத்திற்கு அருகில் நின்று இரண்டு பேர் மெல்லிய குரலில் உரையாடிக் கொண்டிருந்தனர். அது.... என்னவென்று கேட்போமா?

"ஏனய்யா.... கும்ப மரியாதை, மங்கள வாத்தியங்கள், மாலை, மரியாதை என பலமான வரவேற்பு கொடுத்து, சிவாச்சாரியார்கள் மிகவும் பணிவோடு ஆலயத்தின் உள்ளே அழைத்துச் சென்றார்களே.... இப்படி மரியாதை கொடுக்கும் அளவுக்கு உயர்ந்த மனிதனா.... அவர்? அவரை யார் என்று தெரியுமா?.... என ஒருவன், இன்னொருவனிடம் கேட்க,
அவனோ?.... "என்னய்யா நீர்!? இது கூட புரியாமல்"....வந்திருக்கிறவரு......நம்ம சேனாதிபதி மானக்கந்தனும் அவரோட துணைவியார் கல்யாண சுந்தரியும்"..... என்றான்.

கேள்வி கேட்டவன் ஆச்சர்யத்துடன், "ஓஹோ..சேனாதிபதியா..? அரசாங்க அதிகாரி... அதுக்கு தான் இவ்வளவு ஆர்பாட்டமா? விட்டா... ஆண்டவனே எழுந்து வந்து, "அய்யா, வாங்க"ன்னு கோவிலுக்குள்ளே கூட்டிகிட்டுப் போவார் போலிருக்கே!... நல்லவேள..ஆண்டவன் வரல!..." என அலட்சியமாய் பேச...

"வருவாருய்யா... அவரத் தேடி, ஒரு நாளைக்கு... ஆண்டவனே வந்தாலும் ஆச்சர்யமில்ல!"..

இதைக் கேட்டு பதறியவனாய்,” என்னது?.. ஆண்டவனே அவரத்தேடி வருவாரா?.... என்ன தான் அரசாங்க அதிகாரியானாலும் இவ்ளோ ஆணவம் கூடாது! நீ என்னமோ ரொம்ப பெருசாதான் பேசற!”..என சற்றே சினந்து கொண்டான்.

மெல்லச் சிரித்த இன்னொருவன், “இதுக்கு ஏன்யா நீ கோபப்படற!?... அவரத் தேடி கண்டிப்பா ஆண்டவன் வருவான்! அவரு சேனாதிபதிங்கறதுனால இல்ல!... இந்த நாட்டுலயே நானறிஞ்ச வரையிலே, மிகப் பெரிய சிவபக்தர்..... சிவத்தொண்டர் இவர் தான்! இவரோட பக்திய மெச்சி, கண்டிப்பா ஆண்டவன் வருவான்! அதாவது....பாசங்காட்ற தாயத் தேடித்தானே கொழந்த தவழ்ந்து வரும்!? இந்த மானக்கந்தரும் சிவன, எங்கேயோ இருக்கற கடவுளா நெனைக்கறதில்ல! தன்னோட குழந்த மேல ஒரு தாய் எவ்ளோ அன்பா இருப்பாளோ அதவிட அதவிட ஆயிரம் மடங்கு பாசம் இவருக்கு எம்பெருமான் மேல உண்டு

“அப்படியா?” ஆச்சர்யமாகப் பார்த்தான்.




“ஆமாய்யா!... இவரோட பார்வையில பட்றதெல்லாம் பரமனின் வடிவமாவே தெரியும்! அதனால தான் இவர் சேனாதிபதியா வந்ததுக்கப்புறம் போரே வரல! ஏன்னா... நம்ம நாட்டுக்குப் பகைவனே இல்ல! இது மட்டுமா?....
சிவனடியார்களக் கண்டுட்டா. சிவனையே கண்டுட்ட மாதிரி சிலிர்த்துப் போவாரு! இவரோட சிவபக்திய சாதாரணமாக எட போட்டுடாத!” என சிலாகித்துக் கூறினார்.
இதைக் கேட்டு, உடனிருந்தவனும் மெய்சிலிர்த்து மானக்கஞ்சாறரின் பக்தியை எண்ணி மனதால் வணங்கினான்.

சரி...இப்போது அவர் ஆலயம் வந்ததற்கான காரணத்தை அறியலாம். மானக்கஞ்சாறருக்கும் அவரது மனைவி கல்யாண சுந்தரிக்கும் மணமாகி, பல ஆண்டுகள் ஆகிறது. சேனாதிபதி என்பதனால் செல்வாக்கிற்கு குறைவில்லை. வேளாண் குலத்தவர் ஆதலால் விளை நிலங்கள் ஏராளம்! செல்வச் செழிப்பும் உயர் பண்புகளும் உரம் போடாமலே விளைந்த பயிராக வளர்ந்த வண்ணமே இருந்தன. செல்வ வளம், செல்வாக்கு, அனைத்தும் இருந்தாலும் பரமன் மீது கொண்ட பக்தி எல்லையற்று இருந்தது மானக்கஞ்சாறரிடம்! கோவிலில் அந்த இருவரும் சிலாகித்துக் கொண்டதைப் போல இவர் ஒரு சிறந்த பக்திமான் என்று நாடே அறியும் இவ்வளவு இருந்தும் நாளொரு கோவில், பொழுதொரு சன்னதி என கணவன், மனைவி இருவரும் பரமன் ஆலய படியேறி அலைவது எதனால்?...

இவர்களுக்கு ஒரே ஒரு குறை.....

ஆம்! ஆயிரம் செல்வங்கள்...அளப்பரிய செல்வாக்கு, அரசனின் ஆதரவு, இல்லத்திற்கு அணி சேர்க்கும் தர்மம், அனைவரையும் மதிக்கும் பண்பு, ஆண்டவன் மீது அளவற்ற பக்தி இத்தனையும் கொண்டு, நல்லறத்தோடு தாம்பத்யம் நடத்தி வரும் இத்தம்பதிகளுக்கு பிள்ளைச் செல்வம் என்னும் பேற்றினை இறைவன் கொடுக்காமல் விட்டது ஏன்?...இது, இவரைப் பற்றி அறிந்தவர்கள் கேட்கின்ற கேள்வி?...

இறைவனின் திருவடிகளில் முறையீடு செய்யும் வண்ணம், சிவாலய திருப்பணிகள் செய்வதோடு, இருக்கின்ற ஆலயங்களுக்கெல்லாம் சென்று சிவதரிசனம் செய்து வந்தார் மழலைச் செல்வம் வாய்ப்பது எப்போது?....

எதற்கும் காலம் கனிய வேண்டும் அல்லவா?...

இப்போது தான் கனிந்தது! கல்யாண சுந்தரியம்மாள் அந்த கங்காதரனின் அருளால் கர்ப்பமுற்றார்! மானக்கஞ்சாறருக்கு வானமே வசப்பட்டது போல தோன்றியது! எப்போது இறைவன் கொடுப்பான் என வேண்டினார்! இப்போது கொடுத்து விட்டான் இறைவன்! ஈசனின் அருட்கொடையை எண்ணி எண்ணி பூரித்தார்

நாட்கள் வளர்ந்தன; கருவும் வளர்ந்தது!

நல்லதொரு திரு நாளில் சிவப்பிரசாதமாக மானக்கஞ்சாறரின் மனைவி அழகிய, ஒளி பொருந்திய கண்களுடன் திகழ்ந்த ஓர் பெண் மகவைப் பெற்றெடுத்தார்!

"அப்பனின் புகழ்பாட என் அன்னை அவதரித்தாள்," என ஆனந்தத் துள்ளல் போட்டு அகமகிழ்ந்தார் மானக்கஞ்சாறர்! நீண்ட கால வேண்டுதலின் பயனாய் கனிந்த கனி என்பதால் தன் மகளுக்கு "சிவக்கனி" எனப் பெயரிட்டார், மானக்கஞ்சாறர்!

பிறை வளர்ந்து முழுமதியானது போல், இறைவனின் திருவருளால் பருவ வயதை அடைந்தாள், சிவக்கனி கொடியில் பூத்த மலர் கொடியிலே இருப்பதால் யாருக்கு என்ன பயன்?! கொடிமலர் அழகாய்த்தானிருக்கும்! ஆனால், மலர்ந்த பயனை அடைய மணவாளன் தோள் சேர்ந்தால் தானே மலருக்கு பயன்?...

மின்னாளும் விழிகள்; நூலாடும் இடை; கனியாளும் தனங்கள்; தேனூறும் இதழ்கள்; மனமாளும் பருவம் என வானுலக மணாளனை மணமுடிக்க, நாற்றிசையும் சென்றடையும் வண்ணம் செய்தி அனுப்பினார், மானக்கஞ்சாறர்!

மானக்கஞ்சாறரின் குலப்பெருமை, போர்த் திறமை, குணப் பெருமை, செல்வச் செழிப்பு,... இவை அனைத்தையும் அறிந்த உத்தமர் ஏயர்கோன் கலிக்காமர் என்பார், சிவக்கனியை தன் குலக் கனியாய் கொண்டாடி மகிழ வேண்டும் என விருப்பம் கொண்டார்.

பெரியோர்கள் கூடினர்; வார்த்தைப் பரிமாற்றம் நடந்தது! இறுதியில் இவர்களின் வாழ்க்கைப் பரிமாற்றம் நிகழ ஒப்புதல் அளிக்கப்பட்டது!

கொற்றவனின் சபையை அலங்கரிக்கும் மானக்கஞ்சாறர், தன் குல மகளின் எதிர்காலத்தை




அலங்கரிக்க மணவிழா ஏற்பாடுகளை நாடே மெச்சும் வகையில் ஏற்பாடுகள் செய்தார்!
சிவனின் அருளால் பெற்றெடுத்த ஒரே ஒரு செல்வமகள்; சீரும் சிறப்புமாய் திருமணம் நடைபெற, தேர்களில் சீர் வரிசை! தன் மாளிகையையே மணப் பந்தலாய் மாற்றி, பொன்னாலும் மணியாலும் இழைத்திருந்தார், மானக்கஞ்சாறர்! மன்னவன் முகம்காண நாணத்தோடு காத்திருந்தாள் சிவக்கனி!
ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சூரியனைப் போல் மணமகன் அழைப்பு! அருகிலே உள்ள மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டார் மணமகன் கலிக்காமர்!

விடிந்தால் திருமணம்! விருந்தினர்களை வரவேற்று, ஒருவாறு ஓய்ந்த நிலையில் மகளின் மனக் கோலம் காணவிருக்கும் மகிழ்வோடு, நண்பர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தார், மானக்கஞ்சாறர்! இதனிடையே, திங்களும் கங்கையும் ஆடிடும் சடைக்கற்றை,ருத்ராட்ச மாலை, மணம் வீசும் திரு நீறு மணித் தேகம் எங்கும் பூசி, அந்தி வெயில் அணைத்தாடும் ஆகாயம் போல் திருமேனி பெற்ற சிவனடியார் ஒருவர்....அல்ல, அல்ல... சிவனே, சிவனடியாரின் திருக் கோலத்தில் அந்த மண மாளிகையின் உள்ளே நுழைந்தார்

அவரைப் பார்த்த மானக்கஞ்சாறர், அகமகிழ்ந்தார்! தன் இல்லத்தில் ஒரு மங்கள காரியம் நடைபெறும் சமீபத்தில் தன் மகளை வாழ்த்த சிவனே வந்தார் என சிந்தை குளிர, அவரது கால்களில் தெண்டனிட்டு வணங்கி, அமர வைத்து உபதேசித்தார்! "சுவாமி, இந்த நல்ல வேளையில் என் இல்லத்தில் தங்கள் பாதச் சுவடுகள் பதிய நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்; தாங்கள் இங்கேயே இருந்து, காலையில் என் மகளையும் அவள் மணாளனையும் வாழ்த்தியருள வேண்டும்," என பணிவுடன் வேண்டினார்!
"எங்கே உன் மகள்?" என்றார், சிவனடியார்.

ஒரே துள்ளலாக உள்ளே ஓடி, தன் மகளை அழைத்து வந்தார், மானக்கஞ்சாறர்!
வந்த மகள், சிவனடியார் பாதங்களைத் தொட்டு வணங்கி எழுந்து நின்றாள்! சிவனடியார் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்!
யவனம் தோய்ந்த பருவம்; வெண்மேகக் குவியலாய் மென்மைமிகு தேகம்! தேவதை போல் பிரமிக்க வைக்கும் பேரழக்கு எல்லாவற்றுக்கும் மேலாக.... நீண்டு வளர்ந்து, நெருங்கி உறவாடி, இடை தாண்டி விளையாடும் கருங்கூந்தலை கண்டார்;

அவர் உள்ளம் ஒரு கணக்குப் போட்டது "இந்த மங்கையின் கூந்தல் பஞ்சவடி என்னும் மயிர்க்கற்றை பூணுலாக என் மார்பை அலங்கரித்தால் நன்றாக இருக்குமே!" - தன் மனதில் பட்டத்தை உடனே, மானக்கஞ்சாறரிடம் கேட்டு விட்டார்!
விடிந்தால் திருமணம்! தன் மகளோ மணக்கோலத்தில் இருக்கிறாள்; மணமகனும் வந்தாயிற்று!
இந்த நேரத்தில் பெண்மையின் அழகுக்கே அழகு சேர்க்கும் கூந்தலைக் கேட்கிறாரே.....
சுற்றி நின்றோர் திகைத்த அந்த நொடியில்....
மானக்கஞ்சாறர் எதையுமே யோசிக்கவில்லை! அருகிலே நின்றிருந்த வீரன் ஒருவனிடம் இருந்த உடை வாளை உருவி எடுத்தார்
தன் மகளுடைய கூந்தலை கொத்தாகப் பிடித்தார்; அதை அடியோடு அறுத்தார்! அப்படியே அதை சிவனடியாருக்கு அளித்தார்!

அதைப் பெற்றுக் கொண்ட சிவனடியார் தன் உருமாறி சிவனாக சுயதரிசனம் கொடுத்தார்! பின் வாழ்த்தி மறைந்தார்!
விடிந்தது!
மணமகன் வந்தார்; விபரம் அறிந்தார்! அவரது முகமோ ஆயிரம் சூரியன் ஒன்றுகூடி வந்ததைப் போல் பிரகாசம் காட்டியது!

சிவனுக்கே தன் தலை முடியை பூணுலாக அளித்த இந்தப் புண்ணியவதியை மனையாளாய் அடைய நான் மாதவம் செய்திருக்க வேண்டும் என மகிழ்ந்து அவளை மணந்தார்.
இது தான் உண்மையான சிவத் தொண்டு

இந்த செயற்கரிய செயலால்  மானக்கஞ்சாற நாயனார் என போற்றப்பட்ட சேனாதிபதி இன்று அறுபத்து மூவரில் ஒருவராக அருளாசி புரிகிறார்.

ஓம் நமசிவாய

~ ரா. பன்னீர்செல்வம்




SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701

# தங்கத்தில் கலக்கப்பட்ட செம்பு!

தில்லைம்பதி ஆலய சிவகங்கை தீர்த்தத்தில் அந்த மன்னன் ஸ்நானம் செய்து கொண்டிருந்தான். அவன் பெயர் இரணியவர்மன் என்பது. வடதேசத்தை ஆண்டு கொண்டிருந்த அந்த அரசன் தனது தீர்த்த யாத்திரையின் ஒரு பகுதியாக தில்லை தலத்திற்கு வந்திருந்தான். குளித்துக் கொண்டிருக்கையில், நீருக்குள் அவன் மூழ்கும் போதெல்லாம் காதிற்குள் சீராக ஏதோ ஒரு ஒலி தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது. அதனை கூர்ந்து அரசன் கேட்ட போது அவன் வியப்பின் உச்சிக்கே "போய்விட்டான், காரணம் அது ஓம் ஓம் என ஒலித்துக் கொண்டிருந்தது.

மீண்டும் அத்தகைய தெய்வீக சப்தத்தை கேட்க, மன்னன் நீரில் மூழ்கி, அது வரும் பக்கம் திரும்பி கண் விழிக்கையில், அவன் அதிர்ச்சியிலும், ஆனந்தத்திலும் மூழ்கும் வகையில் ஒரு காட்சி அவனுக்கு



கிடைத்தது. அங்கே நடனமாடும் நிலையில் சிவபெருமானின் திருக் காட்சிதான் பிரமிப்புடன் அந்த நடன கோலத்தை, சிறந்த கலைஞனான அவன் உன் வாங்கிக்கொண்டு, தீர்த்தத்தை விட்டு மேலே எழும்பி கரைக்கு வந்தான். அரண்மனைக்கு உடனே திரும்பிய இரண்யவர்மன் சிவகங்கை தீர்த்தத்தின் உள்ளே கண்டு ரசித்தக் காட்சியை, தான் அறிந்திருந்த ஓவியக் கலை மூலம், அழகான சித்திரமாக்கிவிட்டான். அவன் சித்திர வடிவு "ஆடும் சிவனுக்கு" சுத்த தங்கத்தில் உருவச் சிலை அமைக்க வேண்டும் என்ற லட்சியம் கொண்டான்.

இரண்யவர்மனின் உத்தரவின்படி நாடெங்கிலும் உள்ள தலை சிறந்த சிற்பிகள் அவனை சந்தித்தனர். "உங்களுக்கு ஒரு கட்டளை இந்த சித்திரத்தில் நான் வரைந்துள்ளபடி பரமேசுவரின் நடன திருக்கோலத்தை சுத்த தங்கத்தில் வார்த்து உருவாக்க வேண்டும். இந்தப் பணி இன்னும் 48 தினங்களுக்குள் முடிவடைய வேண்டும். ஒரு நாள் கூட ஆனாலும் அதற்கான விபரீத பலனை சிற்பிகளாகிய நீங்கள் அனுபவிக்க நேரிடும்" என்று எச்சரிக்கையும் விடுத்தான்.

அதனால் சிற்பிகள் அன்றே இரண்யவர்மனின் லட்சியத் திருவுருவை படைக்கும் பணியை உடனேத் தொடங்கினர். வயதிலும், திறமையிலும் அனுபவத்திலும் சற்றும் குறைவில்லாத அச்சிற்பிகள் சிலையை தங்கத்தில் உருவாக்குகையில் பல சோதனைகளை சந்திக்க நேர்ந்தது. ஒவ்வொருநாளும், வடிக்கப்படும் சிலையில் ஏதேனும் ஒரு குறையிருந்து அது முழுமை பெறுவதில் தடை ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது.

இப்படியே மன்னன் விடுத்த சிலை முடிக்கும் கெடு தேதி நெருங்கிக்கொண்டேயிருக்க சிற்பிகள் மனங் கலங்கிப் போனார்கள். இதனை மன்னனிடம் எப்படி தெரிவிப்பது என பயந்து கொண்டிருந்த நேரத்தில், அவர்களில் ஒரு வயதான சிற்பி கொடுத்த ஆலோசனையின் பேரில், அவர்கள் நாடிச் சென்றது சித்தர் போகரை.

அன்புடன் சிற்பிகளை வரவேற்ற போகர் அவர்களுக்கு ஆறுதல் அளித்து தனது சீடனும் சிற்ப நிபுணனுமான கருவூராரை உடனே அழைத்து "நடராஜரின் ஆடும் சிலையை வடிவமைக்க சில நுட்ப தகவல்களை தெரிவித்து வந்தவர்களுடன் அவனை அனுப்பி வைத்தார் உடனடியாக!.



யார் இந்த கருவூரார்?

அந்தணர் வகுப்பைச் சேர்ந்த கருவூரார், பிறந்தது கரூர் தலைநகரில், பஞ்சலோக விக்கிரங்களை வார்ப்பதும், செப்பனிடுவதும் இவர் சார்ந்த குலத் தொழில், தற்செயலாக கருவூரார் திருவாவடுதுறையில் சித்தர் போகரை தரிசித்த போது, அவர் ஆசிகளைப் பெற்றதோடுமல்லாது அவர் அறிவுறுத்தியப்படி தங்கள் குல தெய்வ அம்பாளை மனமார வழிபடத் துவங்கினார். இளம் வயதிலேயே ஞான நாட்டம் இவரை பற்றிவிட்டதால், அது குறித்தான நூல்களை கற்பதில் இவர் ஆர்வங் காட்டினார். படிப்படியாக பல சித்துக்கள் ஆற்றும் வகையில் ஆன்மீகத்தில் உயர்ந்தார் கருவூரார்.

கருவூரார் இயற்றி அருளிய நூல்களில் கருவூரார் வைத்தியம் 500 , கருவூரார் குருநூல் சூத்திரம் 105, கருவூரார் பூரண ஞானம் 100, கருவூரார் மெய்ச்சுருக்கம் 52, கருவூரார் சிவஞான போதம் 42, கருவூரார் கற்பவிதி 39, கருவூரார் முப்பு சூத்திரம் 32, கருவூரார் அஷ்டமாசித்து, கருவூரார் பூஜாவிதி 30 போன்ற நூற்கள் அடக்கம். இன்றும், என்றும் போற்றப்படும் இவை

கருவூரார் மேற்கொண்ட தலையாய பணி, பல ஆலயங்களுக்குச் சென்று, தங்கத்தால் லிங்கங்களை உருவாக்கி, தக்க வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்வதாக அமைந்திருந்து.

இத்தகைய திறமை படைத்த சித்தரைதான் நடராஜர் சிலையை தங்கத்தால் உருவாக்க மகான் போக சித்தர் தேர்ந்தெடுத்தார். அரசன் இரண்யவர்மன் நடராஜர் சிலை வடிக்க சிற்பிகளுக்கு கொடுத்திருந்த கால அவகாசம் முடிய இன்னும் ஒரே நாள் இருந்த நிலையில், கருவூரார் அரசன் அனுமதியோடு அப்பணியை ஏற்றிருந்தார்.

ஆலயத்தின் ஒரு மூலையில் இருந்த அறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவூரார், இன்னும் ஒரு மணி நேரத்தில் சிலையை உருவாக்கிக் காட்டுவேன் என உறுதி மொழியை அளித்துவிட்டு, அவநம்பிக்கையுடன் இதர சிற்பிகள் நிற்க, அந்த அறையை சார்த்தி உள்பக்கம் தாழிட்டுக் கொண்டார். மற்ற சிற்பிகள் உள்ளமோ திக்திக்கென அடித்துக் கொள்ள, அமைதியற்று உலவிக் கொண்டிருந்தனர் - "ராஜகோபத்திற்கு அஞ்சி"

குறிப்பிட்ட ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே, தான் சிலை உருவாக்கிக் கொண்டிருந்த அறையை படாரென கருவூரார் திறந்து, எல்லா சிற்பிகளையும் உள்ளுக்குள் அழைத்தார். அவர் விரல் காட்டிய திசையில் இரண்யவர்மன் வடித்திருந்த ஓவியத்தின்படி சற்றும் பிசகாமல் நடராஜரின் திரு உரு தங்கத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தது. இதனை ஆச்சரியத்துடனும், திகைப்புடனும் பார்த்த அனைத்து சிற்பிகளும் சிலையென சமைந்து நின்று விட்டனர் - "தாங்கள் 48 நாட்கள் சிலை வடிக்க, அரசனால் அவகாசம் அளித்திருந்த நிலையில், நாற்பத்தியெட்டு நிமிடங்களில், இந்த சிற்பி சாதித்து விட்டாரே" என பெரும் மகிழ்ச்சி கொண்ட சிற்பிகள் கருவூராரை வணங்கி, மன்னிப்பும் கோரினர். தாங்கள் அவர்மீது முன்பு கொண்ட அவநம்பிக்கைக்காக.

49 ம் நாள்! தனது மந்திரிபிரதானிகளுடன் சிலை முடிந்து விட்டதா என்ற பெருத்த ஆவலோடு ஆலயம் வந்த இரண்யவர்மன் பிரமிப்பு அடைந்தான். ஏனென்றால் அந்த நடராஜர் திரு உரு, அவன் தீர்த்தத்தின் உள்ளே கண்டபடியும், தான் படைத்த ஓவியத்தின் படியும் அப்படியே தத்ரூபமாக இருந்ததால்.

அரசனின் முதலமைச்சர் அளித்த ஆலோசனையின்படி, திரு உருவில் சேர்க்கப்பட்ட தங்கத்தின் தரத்தை



சோதிக்க விரும்பினான் மன்னன், சிலையின் அருகில் ஆங்காங்கே சில துகள்கள் சிதறிக் கிடக்கவே, அதனை அங்கேயே ஆய்வு செய்ய பணித்தான் சிற்பிகளை. அப்போது தான் அவர்கள் கண்டுபிடித்தனர், சிலை வடிக்கையில் தங்கத்துடன் சிறிய அளவில் செம்பும் சேர்க்கப்பட்டுள்ளதை. அரசன் கட்டளைப்படி அச்சிலை சொக்கத்தங்கத்தால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த உண்மையை எப்படி அரசனிடம் தெரிவிப்பது என சிற்பிகள் நடுநடுங்கிக் கொண்டிருந்தனர்.
"என்ன விஷயம்!" தயக்கமென்ன கூறுங்கள் சிலை அசல் தங்கத்தினால் உருவாக்கப்பட்டதுதானே" கம்பீரமாக அரசன் கேட்க, மெய்விதிர்ப்புடன் சிற்பிகள் "அரசே! கொஞ்சம் செம்பும், தங்கத்துடன் கலக்கப்பட்டுள்ளது" எனக் கூற, வெகுண்டெழுந்தான் மன்னவன்.

அரசன் அங்கேயே நடத்திய விசாரணையில் நடராஜர் சிலையை உருவாக்கியது கருவூரார் என்ற சிற்பிதான் என்பது தெளிவாகவே, ஆத்திரத்துடன், "அவரை இழுத்து வாருங்கள் உடனே" என அரசன் கட்டளையிட்டான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் படை வீரர்கள் அந்த சிற்பியான கருவூராரை தேடி அலைந்து, அவரை சிறைபிடித்து மன்னன் முன்னால் நிறுத்தினர்.
இதற்குள் இச்செய்தி எட்டிடவே, போகர் தனது சீடர்கள் சிலருடன் இரண்யவர்மனைச் சந்தித்தார். அவர்கள் கையில் தங்க மூட்டைகளும், தராக ஒன்றும் இருந்தது. போகரைக் கண்டதும், அவரை

பணிவுடன் அரசன் வணங்கினான். அப்போது போகர் "அரசனே! இந்த நடராஜர் சிலையை உருவாக்கியதால் கைது ஆன கருவூரார் எனது சீடர்களில் ஒருவன். சிலையை அசல் தங்கத்தில் செம்பு கலவையின்றி உருவாக்கினால், ஆண்டுகள் கழிய, தங்க ஒளி இறைதரிசனம் பெறுபவர்களின் கண்களில் தாக்கி, அவர்களை பார்வையிழக்க வைத்துவிடும். இந்த உண்மையை அறியும் வாய்ப்பு உனக்கில்லை. தவிர நாளடைவில் தங்க ஆசையில், அதனை சிலர் திருடும் எண்ணமும் கொள்ளக்கூடும், என்றும் ஒரே போல் சிலை காட்சியளிக்கவே, நான் எனது சீடனுக்கு பயிற்றுவித்தபடி அவன் செம்புடன், சில மூலிகைகளையும் பயன்படுத்தி குறுகிய காலத்தில் நீ விரும்பியவாறு "ஆடும் நடராஜரை" உருவாக்கித் தந்துள்ளான்" என்று கூறிக் கொண்டு இருக்கையிலே அரசன் ஏதோ சொல்ல விரும்ப அவனை பேசாமல் தடுத்து விட்டு போகர் மேலும் சொன்னார்.

"என் சீடனால் நீ இழந்த தங்கத்தை உனக்கு திரும்பத் தரும் நோக்கத்தில் இங்கே எனது இதர சீடர்கள் அசல் தங்கமும், தராகம் கொண்டு வந்துள்ளனர். இதோ தராசின் ஒரு தட்டில் நடராஜர் சிலையை வைக்கச் சொல்"
போகர் கூறியவாறு ஒரு தட்டில் புதிய தங்க நடராஜர் சிலையை படைவீரர் ஒருவர் தூக்கி வைக்க, மறு தட்டில், தன்னுடன் மூட்டையில் கொண்டு வந்திருந்த தங்க கட்டிகளை கொட்டச் செய்தார். அப்போது நடராஜர் சிலை உள்ள தட்டு மாறுபட்டு போனது, "மன்னா! சிலையை என்னிடம் தந்துவிட்டு, தராக தட்டில் கொட்டப்பட்ட தங்கம் அனைத்தையும் நீயே எடுத்துக் கொள்" என போகர் கறாராகக் கூற, திகைத்துப் போன இரண்யவர்மன் "மகானே! அபசாரம் இழைத்து விட்டேன். என்னை மன்னித்து அருளுங்கள். தங்கள் சீடரின் மீது தவறான அவதூறு கூறியதையும், மன்னித்து விடுங்கள்" என கண்ணீர் மல்க வேண்டிக்கொண்டான். உடனே கருவூரார் மன்னனால் விடுதலையாகி போக சித்தரை வணங்கி நின்றார்.

அதன்பின், மகான் போகர் நடராஜர் சிலை ஆலயத்தில் எப்படி பிரதிஷ்டை செய்யப்படல் வேண்டும் என்பதையும், சில ஆகம முறைகளையும் இரண்யவர்மனுக்கு எடுத்துச் சொன்னார். சொக்கத்தங்கமான தனது சீடன் கருவூராரை அன்புடன் அணைத்தவாறே, போகர் அரசனிடம் விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டார். கருவூரார் இதற்குப்பின் எத்தனையோ அற்புதங்களை பல தலங்களில் மக்களுக்கு நிகழ்த்திக் காட்டியதுடன், அவர்கள் பக்தி வழியில் சிறந்து வாழ பல அரிய போதனைகளை நேரிலும், பல நூற்கள் மூலமும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இத்தனை புகழுக்கும் சொந்தமான கருவூரார் பல ஆண்டுகள் இப்புவியில் வாழ்ந்து பொது ஜனங்களை நல்வழிப்படுத்தி, இறுதியாக கருவூர் பசுபதி ஈசுவரருடன், இரண்டற கலந்த அற்புதம் நடந்தது. அந்த மகானுக்கு கருவூரிலும், தஞ்சை பெரிய கோயிலிலும் விசேட சன்னிதிகள் அமைந்திருக்க, அவரை மனமார வழிபடுபவர்களுக்கு அவர் இன்றும் அருளாசிகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

"சினமெனும் பாம்பு இறந்தால்
தாண்டவக் கோனே
யாவுஞ் சித்தியென்று நினையேடா
தாண்டவக் கோனே
தாம் திமி திமி தந்தக் கோனாரே
தீம் திமி திமி திந்தக் கோனாரே"

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)

# கடன் சுமையை தீர்ககும் யந்திரம்

தீய சக்திகள் மற்றும் எதிரிகளிடமிருந்து நம்மை காத்தருளும் தெய்வம் பைரவர் ஆவார். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைப்பதற்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்பதவி கிடைப்பதற்கும் பைரவர் வழிபாடு சிறந்ததாகும். முக்கியமாக சுயதொழில் செய்பவர்கள் தொழிலில் நல்ல லாபங்களை ஈட்டுவதற்கும் சொர்ண ஆகர்ஷண பைரவர் வழிபாடு சிறந்ததாக கருதப்படுகிறது.
ஸ்வர்ணம் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு தங்கம் என்று பொருளாகும். ஆகர்ஷணம் என்ற சொல்லுக்கு ஈர்த்தல் என்று பொருளாகும். சொர்ண ஆகர்ஷண பைரவ எந்திரமானது தங்கத்தை ஈர்க்கும் தன்மையுடையது. சிலருக்கு சொத்துகளை வாங்குவதும் சொத்துக்களை சேர்ப்பதும் மிகப்பெரும் சவாலாகவே இருக்கிறது. தன நிலையில் ஏற்றத்தை கொடுத்து நிலம், வீடு, வண்டி போன்ற இல்லுலக இன்பத்தை சொர்ண ஆகர்ஷண பைரவர் எந்திரத்தை தினமும் வழிபாடு செய்வதன் மூலம் அடையலாம்.

**சொர்ண ஆகர்ஷண பைரவர் எந்திரம் வழிபாடு செய்யும் முறை:**

சொர்ண ஆகர்ஷண பைரவர் எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் எந்திரத்தின் மையப்பகுதி மற்றும் நான்கு மூலையிலும் சந்தனத்தை வைத்து உலர் பழங்களை வைத்து செவ்வரளி பூவை கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறி வந்தால் கடன் பிரச்சனையிலிருந்து மீண்டு பொன் பொருள் போன்ற செல்வ வளங்களைப் பெற்று ஐஸ்வர்யமான வாழ்வு வாழலாம்.

**சொர்ண ஆகர்ஷண பைரவர் எந்திரத்திற்கு உரிய மந்திரம்:**

ஓம் ஸ்ரீம் ஸ்வர்ண ஆகர்ஷண பைரவாய நமஹ



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மந்திர மகிமை
# விஷ நோய்கள் குணமாக

சத்வித்யாவின் மந்திர மகிமை பகுதியில் நம் வாசகர்கள் பயன்பெறும் வகையில் இந்த இதழில் என்ன மந்திரத்தினை அறிமுகம் செய்யலாம் என நினைத்த நேரத்தில் சௌந்தர்ய லஹரியின் 20 வது பாடல் சட்டென கண்ணில் பட்டது!

கொடிய வைரஸ் பரவி வரும் இவ்வேளையில், வணங்குவோரின் துன்பங்களை மாய்த்து தூய வாழ்வினை அளிக்கும் 20 வது பாடல் "விஷ நோய்கள் குணமாக"...... வழிவகை செய்கிறது் அதனையே இப்பகுதியில் காண்போம்.

**மந்திரப்பாடல்:**

"கிரந்தீ-மங்கேப்ய கிரண - நிகுரும்பாம் தரஸம்
ஹ்ருதி த்வா மாதத்தே ஹிமகர - சிலா - மூர்த்தி மிவய;
ஸ ஸர்ப்பாணாம் தர்ப்பம் சமயதி சகுந்தாதிப இவ
ஜ்வரப் லூஷ்டான் த்ருஷ்ட்யா ஸுகபதி ஸுதா தாரஸிரயா".

இந்தப் பாடலின் பொருளைப் பாப்போம்.

தாயே! உன் முழுவதிலுமிருந்து அமுத ரசத்தின் ஒளிப் பிரவாகம் உருவாகிறதே உன் திருமேனி என்ன சந்திர காந்தக் கல்லால் ஆனதா? உன்னை மனதார தியானிக்கும் போது, பாம்புகளை அடங்கச் செய்யும் கருடனின் அபாரசக்தி பெருகுகிடுமே!

அமுத நாடி ஓடிடும் உன் அபூர்வ பார்வையால் நோயின் துன்பங்கள் அனைத்தையும் நீக்கி, சுகமடையச் செய்கிறாயே!....

**பிரயோகிக்கும் முறை:**

தாமிரத் தகட்டில் விபூதி அல்லது தண்ணீரைப் பரப்பி, இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து கொள்ள வேண்டும்.

இதையே பூஜைக்குப் பயன்படுத்தலாம்.

பூஜையில் வடக்கு முகமாக அமர்ந்து தினமும் 1000 முறை வீதம் 45 நாட்களுக்கு இந்த மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

வில்வ இலைகளையோ அல்லது விபூதி பச்சிலைகளைக் கொண்டோ துர்கா அஷ்டோந்திர அர்ச்சனை செய்ய வேண்டும்.

தேங்காய், பழங்கள், பால் பாயசம் மற்றும் எள் சாதம் ஆகியவற்றை செய்து நைவேத்யம் செய்தல் நலம்!

மேற்கண்ட முறையில் இந்த மந்திரப் பிரயோகம் செய்து வந்தால் விஷ ஜந்துகளைக் கட்டுப் படுத்தும் ஆற்றிலும் விஷ நோய்களிலிருந்து குணமாவதும் இயல்பாய் நடைபெறும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# ஆடல்வல்லானுக்கு ஆனித் திருமஞ்சனத் திருவிழா !

"திருவளர் ஆரூர் மூலம் திரு ஆனைக்காவே நாபி, மருவளர் பொழில் சூழ் அண்ணாமலை மணிப்பூர நுவிர் இருவரும் கண்ட மன்றம் இதயமாம் திருக்காளத்தி பொருவருங் கண்டமாகும் புருவ மத்திய மாங்காசி"

எனச் சிறப்பித்து திரு விளையாடல் புராணத்திலே சில தொண்மையான சிவத் தலங்களை போற்றிப் பாடியுள்ளார் மகான் பரஞ்சோதி முனிவர்.

"கோயில்" என்றால் சைவர்கள் சுட்டிக் கூறுவது மின்னுக புகள்சேர் தில்லை எனும் சிதம்பரத் தலத்தையே. இந்த சிதம்பரம் தான் இந்த அகண்ட உலகத்தின் இருதயம் என அடையாளம் காட்டும் பரஞ்சோதி முனிவரின் பாடல்!

ஆதி நாத ராடு நாடகச் சாலை அம்பலச் சிதம்பரம், புண்டரீகபுரம், வியாக்ரபுரம், ஹேமசபாநாத புரம், தில்லைவனம், சிற்றம்பலம், புலியூர், பெரும் பற்ற புலியூர் இப்படி எத்தனையோ வேறு பெயர்களைக் கொண்ட சிதம்பரம் பற்றிய மகிமைகள் ஏராளம் ஒரு பட்டியலில் அடக்க முடியாது



பரஞ்சோதியார்

"தீர்த்தமென்பது சிவ கங்கையே,
ஏத்த அரும் தலம் எழிற் புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே"

என்று மகான் குமர குருபரர் வர்ணித்துக் கூறும் சிதம்பரத்தில் தான் தெய்வப் புலவர் சேக்கிழார் திருத் தொண்டர் மாக் கதை எனும் பெரிய புராணம் பாட, சிவ பிரானே அவருக்கு "உலகெலாம்" எனும் முதல் அடியை எடுத்தருளினார், என்கிறது புராணம்!

ஐந்து மன்றங்களில் ஒன்றான பொன் மன்றம் ஆன இத்தில்லையிலே தான் வியாக்கிரபாதர் எனும் புலிக்கால் முனிவர், ஆதிசேடனின் அவதாரமான பதஞ்சலி முனிவர், பாணினி, சனகர், சனத்குமார் போன்ற அவதார புருஷர்கள், வானுலகத்திலிருந்து பூலோகம் இறங்கி,
ஸ்ரீ நடராஜர் தனது தேவி உமை கண்டு மகிழ, இப் பிரபஞ்சத்தின் உயிர்ப்பு, மற்றும் இயக்கம் இவற்றை வெளிப்படுத்த ஆடிய அருள் நடனத்தைக் கண்டு களித்துள்ளார்கள்.

புகழ் பெற்ற 63 நாயன்மார்களின் வரலாற்றை உலகறியச் செய்த பெருமை கொண்டது பொன்மன்றான சிதம்பரம். திருமந்திர நூலாசிரியர் திருமூலர் சமாதி கொண்டதும் இவ்வூரில்தான்
அப்பப்பா இத்தனை பேர்களா என்று வியக்கவைக்கும் அளவிற்கு சிதம்பரத் தலத்தை போற்றிப் பாடியும், நூற்களும் அருளிய பல பேர்களில் இவர்களும் அடங்குவர்.




மகான் திரு மூலர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், அருணகிரி நாதர், உமாபதி சிவாச் சார்யர், குமர குருபரர், ஆறுமுக நாவலர், பதினொன்றாம் திரு முறை ஆசிரியர்கள் என பட்டியல் நீள, பல வடமொழி நூற்களும் சிதம்பரத்தைப் போற்றும்

மகான் - உமாபதி சிவாச் சார்யாரின் கோயிற் புராண நூலே, சிதம்பரத் தலம், மற்றும் ஆலயங் குறித்து விலகும் வரலாற்று நூலாகத் திகழ்கிறது.

பண்டைய ஜாபால உபநிஷத் ஸீத ஹிம் ஹதை சமஸ்கிரத நூலில் சிதம்பரத்தை விராட ஹிருதய புண்டரீக ஸ்தானம். என்று கூறியுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது. சிதம்பரம் மணிக் கோவை, சிதம்பர மான்மியம் போன்ற பல நூற்களும், தலப் புகழை அறிய பயன்படுகின்றன.

சிதம்பரத்திற்கு என்றே உள்ள எத்தனையோ சிறப்புகளை அறிய நம் புருவம் மேல் நோக்கி உயரும் இறைவன் ஆடும் இடம் சிற்றம் பலம், பரமேசுவரன் சிவலிங்கமாக காட்சி தரும் இடம் திரு மூலட்டானம், அற்புதமான நடராஜரின் திருச் சந்நிதியே தில்லைச் சிற்றம்பலம், அதுவே சிவனடியார்களுக்கு சிறப்பு மந்திரம்

தமிழ் வேதம் எனப் போற்றப்படும் தேவாரத்தை ஓதும் பழக்கமுடையோர் எந்த சிவத்தல ஆலயங்கள் சென்று தேவாரத்தைத் தொடங்கும் முன்பாக பயபக்தியுடன் "திருச்சிற்றம்பலம்" என முழுங்குவார்கள். பாடி முடித்தவுடன் மீண்டும் திருச்சிற்றம்பலம் என மனமுருகிக் கூறுவார்கள்.

"வையகம் இன் புற நின்ற மருமலர்
பொற்பதம் போற்றி
கையமரு நிலை போற்றி கருணைமுக
மலர் போற்றி
மெய்யிலகும் ஒளி போற்றி விரவி யெனை
எடுத்தாண்ட
செய்ய திரு வடி போற்றி திருச் சிற்றம்
பலம் போற்றி!

என்ற திருச்சிற்றம்பல பாடல் சிதம்பரத்தல முக்கியப் புராண நூலான கோயிற் புராணத்திலே இடம் பெற்றுள்ளது.

ஒரு காலத்திலே தில்லை மரங்கள் அடர்ந்த காடாகத் திகழ்ந்ததால் சிதம்பர தல மரமாக தில்லை மரம் விளங்கியது. இப்போது இங்கே தலமரமாக உள்ளது ஆலமரம்.

ஷேத்திறாமன்றலாலே, அத்தல தீர்த்தம் முக்கியமாக இடம் பெரும். தில்லையிலே அப்படி தீர்த்தங்கள் 12 உள்ளன.

அத்தகைய தீர்த்தங்களில், திருக் கோயிலின் உள்ளே சிவகங்கை, பிரமானந்த கூபம் என்ற இரு தீர்த்தங்களும் பல புராண பின்னணிகளைக் கொண்டுள்ளது.

சிவ வடிவம் பூண்ட சிவ கங்கைத் திருக் குளம் அன்னை சிவகாமி சுந்தரியார் எழுந்தருளித் திகழும் திருக் கோயிலின் எதிரே அமைந்திருக்க, சிவசக்தி வடிவங் கொண்ட பரமானந்த கூபம் சிற்றம்பலத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளது.



சிவகங்கை தீர்த்தம் மிக விசேடங் கூடியது. இத்தீர்த்தத்தில் வருட பிறப்பு, மார்கழித் திருவாதிரை, மாசி மகம், சிவராத்திரி ஆகிய புண்ணிய நாட்களில் பக்தர்கள் நீராடி நற்பலன் பெறுகிறார்கள்.

இதர தீர்த்தங்களாக வியாக்கிர பாத தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், நாகசேரி, புலிமடு, சிவப்ரியை தீர்த்தம், திருப் பாற்கடல் தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், குய்ய தீர்த்தம், வருண தீர்த்தம் என்பவைகள் உள்ளன.

உலகப் புகழ் பெற்ற தில்லை நடராஜர் திருக் கோயில் சுமார் 44 ஏக்கர் பரப்பளவு கொண்டுள்ளது. ஆலய நான்கு பக்கங்களிலும் ஒவ்வொன்றும் சுமார் 135 அடி உயரமும், 7 நிலைகளும், 13 கலசங்களும் கொண்ட பல கலையம்சங்களும் கூடிய 4 கம்பீர ராஜ கோபுரங்கள் உள்ளன.

கோயிலின் மதிற் சுவர்கள் மிக பெரியதாயும், நல்ல உயரங் கூடியதாயும் உள்ளன. எண்ணற்ற சிற்பத் திறன்களும் உள்ள பல மண்டபங்கள், விமானங்கள் சிதம்பர முழம் என்ற அக்கால மரபு அளவு கொண்டு அநேக சிற்பிகள் திறனால் கட்டப்பட்டுள்ள பெருமைப் பூண்டுள்ளது.

கட்டிட நிர்மாணப் பணிகளுக்கு பல்வேறு காலகட்ட மன்னர்கள் காரணமாக இருக்க, சேர,சோழ, பாண்டிய, விஜயநகர கட்டிட நாகரீகம், தில்லை நடராஜர் ஆலயம் முழுமைக்கும் அழகு சேர்க்கிறது எனலாம்.

கிழக்கு, மேற்கு கோபுர வாயில்களில் மகான் பரத முனிவர் குறித்துள்ள முறைப்படி 108 நடன வகை, கரண பரதக் கலை சிற்பங்கள் ஜொலிக்கின்றன.

கி.பி. 1133 முதல் 1530 முடிய உள்ள ஆண்டுகளில் சிதம்பர ஆலயம் அந்தந்தக் கால ஆண்ட மன்னர்களால் பல புன நித்திரனான பணிகளை அடைந்துள்ளது.

இத்தனை பிரமாண்டங்கொண்ட இந்த சிதம்பர தலப் புராணம் மிகச் சுவையுள்ள சம்பவங்களைக் கொண்டுள்ளது.

மழுமுனிவர் என்பவர் காசி நகர வாசியான மத்யந்தனர் என்ற மகரிஷியின் புதல்வர்.

அவர் தன் தந்தையிடமே அனைத்து வேதங்கள், பல சாஸ்திரங்கள், பல கலைகள் இவற்றை நன்குற கற்றுணர்ந்தார்.
மகான் மத்யந்தனர், தில்லைத் தலம் குறித்து விரிவாக எடுத்துரைக்க, அதனால் பெரு விருப்பங்கொண்டு, தந்தையிடம் அனுமதி பெற்று அவ்வூருக்கு பயணித்தார், மழுமுனிவர்.
சிதம்பரம் வந்தடைந்த மழுமுனிவர் அவ்வூர் குளம் பக்கம் வந்து சேர்ந்தவுடன், அங்குள்ள ஆலமரத்தின் அடியில், ஒரு சுயம்புலிங்கத் திருவுருவை தரிசித்து ஆனந்தம் பெற்றார்.
அக்குளம் இன்றைய சிவகங்கைத் தீர்த்தம்.

அந்த லிங்கத் திருஉரு தான் தில்லைச் சிவாலயக் கருவறையில் இன்று குடி கொண்டுள்ள திரு மூலட்டானேசுவரர்.
தினமும் இந்த ஈசுவரரை மனதில் நிறுத்தி, பல மலர்களால் பூஜித்து மகிழ்ந்தார் மழுமுனிவர்.
அவருக்கு ஒரு வித்தியாச விருப்பமிருந்தது இப்படி பூக்களில் உள்ள தேனை வண்டுகள், மலரைத் தீண்டும் முன்பே, பழுதற்ற மலர்களை மரத்தில் ஏறி பறித்து பூஜைக்கு பயன்படுத்த வேண்டும் என்பது.
இதற்கு என்ன செய்வது என யோசித்த மழுமுனிவர் ஈசுவர தியானத்தில் ஈடுபட்டார்.



அவரது தியான நோக்கமென்னவெனில் மரப்பூக்களை ஏறிப் பறிக்க புலிக்கு உள்ளது போன்ற கூர்மையான வலிமையுள்ள நகங்களைக் கொண்ட கால்கள், கைகள் பெற வேண்டுமென்பதாக இருந்தது.
தன் பக்தனின் இந்த வித்தியாச வரத்திற்கு மனமிரங்கி சிவன் அவருக்கு புலிக்கால்களையும், புலிக்கைகளையும் அருளியதோடு மட்டுமல்லாமல், அதிகாலை இருட்டுப் பொழுதில், கண்கள் நன்கு தெரியும் வகையில் புலிக் கண்களையும் அருளினார்"
அது முதல் மழுமுனிவர் புலிக்கால் முனிவர் எனும் அர்த்தங் கூடிய வியாக்கிரபாத முனிவர் என அழைக்கப்பட்டார்.
வியாக்கிரபாதரின் வேறொரு நீண்ட நாள் விருப்பமாக விருந்தது சிவ பெருமானின் ஆனந்தத் தாண்டவ நிலையைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்பதும்.
தில்லைக் கூத்தனின் ஆனந்த திரு நடனத்தைக் காணும் லட்சியம் அதே சமயம் வேறொரு தேவலோக வாசிக்கும் இருந்தது.

அவர் வேறு யாருமில்லை, திருமாலின் படுக்கையான ஆதிசேஷன் தான். அவருக்கு சிவதாண்டவ சிறப்பு குறித்து அருளியது சாட்சாத் மகாவிஷ்ணு தான் அதனால் அதனைக் காணும் ஆவல் கொண்டு அவர் பகவானிடம் அனுமதி கோரினார்.
இறைவனின் இசைவைப் பெற்று விட்ட ஆதிசேஷன் சிவ பிரானைக் குறித்து கடும் தவம் மேற்கொண்டார். அத்தவத்தை ஏற்ற பரமேசுவரன் "என் தாண்டவத்தை தில்லையம் பதி வந்து காண்க!" என ஆனையிட்டு மறைந்தார்.
அதே சமயம் கோனிகா என்ற முனிவர் புத்திர பாக்கியம் வேண்டி பல தினங்கள் சூரிய நமஸ்காரம்

செய்து கொண்டிருந்தார்.
அன்றொரு நாள் அப்படி அக்காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முனிவர், சூரியனுக்கு தீர்த்தம் விட அர்க்கிய பாத்திரத்தை பூமியில் விடுகையில் பாம்புக் குட்டியாக வெளிப்பட்டார் ஆதிசேஷன்.

அப்பொழுது அருகில் இருந்த கோனிகா முனிவரின் பத்தினி தன் கையில் நீர் விட்டதால் பாம்பைக் கண்டு பயந்து போனவள், அதை தட்டி விடவே, பாம்புக் குட்டி அவளுடைய பாதத்தில் விழுந்து பதஞ்சலி என்ற பெயரைப் பெற்று விட்டது.
பாம்பு சிறு பிராயத்திலிருந்து வளர்ந்து வருகையிலேயே பிறவியில் ஆதி சேடனானதால், பாதி மனித வடிவும், பாதி ஐந்து தலை நாகமுமாக மாறி வந்தது.

வளர்ந்தவுடன் பதஞ்சலி தன் இலட்சிய நோக்கான சிவதாண்டவ தரிசனம் பெற சிதம்பரம் அடைகிறார். இதற்குள் தனக்கு தெய்வம் இட்ட கட்டளையின் படி பாணினி சூத்திரம், காட்டி யாயினி வாத்திகம் இவற்றுக்கு உரையெழுதி முடித்து விட்டார் பதஞ்சலி முனிவர்.
ஒரு நாள் பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாத முனிவரும் இறையருளால் சந்தித்து நட்பு பூண்டார்கள்! இருவரும் தாங்கள் கொண்ட ஒரே லட்சியமான சிவத் தாண்டவ நிலை தரிசனம் நிறைவேற, வெவ்வேறு இடங்களில் தனிக் குடில் அமைத்து தங்கி தினமும் சிவகங்கை தீர்த்தக் கரையில் எழுந்தருளியுள்ள திரு மூலட்டானேசுவரரை பூஜித்து வந்தனர்.

~ கீதாமணி





KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 88702 88701

# சத்தியமூர்த்தி சுவாமிகள்

தமிழ் நாட்டின் தென் பகுதியில மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி தான் பொதிகை மலையைச் சார்ந்த, அகத்தியர் இருந்து தமிழ் வளர்த்த பகுதி என்பதை நாம் அறிவோம்!

இந்த மேற்குத் தொடர்ச்சி மலை மட்டுமல்லாது, இதனை சார்ந்திருக்கும் பகுதிகளில் எல்லாம் சித்தர்கள் உலவி, ஆன்மீகமும் மருத்துவமும் ஆராய்ந்து அதன் மூலம் சமுதாய சேவையை செய்திருக்கிறார்கள். இப்படி சித்தர்கள் தாங்கள் பொற்பாதங்களைப் பதித்த பல இடங்களில் ராஜபாளையம் என்னும் நகரமும் ஒன்று இந்த ராஜபாளையம் நகரின் நுழைவுப் பகுதியில் அமைந்திருப்பது சஞ்சீவ மலை எனப்படும் அற்புத மலையாகும் இந்த மலைக்கு நேர் எதிரில் அமைந்திருப்பதே சித்தர் பெருமான் சத்தியமூர்த்தி சுவாமிகளின் ஜீவசமாதி!



யார் இந்த சத்திய மூர்த்தி சுவாமிகள்? இவர் செய்த சமுதாய அருந்தொண்டுகள் என்ன என்பது பற்றியெல்லாம் அறிந்து கொள்வோம்! அருள் மலையான சஞ்சீவி மலைக்கு எதிரில் ஒரு வீடு அங்கே இருக்கும் பெயர்ப் பலகையில் "வள்ளலார் அருள் நிலையம்"! "அருட்ஜோதி இல்லம்" என்கிற பெயர்ப் பலகை காணப்படுகிறது!

ஏதோ, தம்பதிகள் இல்லறம் நடந்திடும் வீடுபோல் உள்ளது இதற்குள்ளா ஜீவசமாதி அமைந்துள்ளது என்ற ஐயத்துடனே உட்புகுந்தால், சுவரில் ஆங்காங்கே பொன் மொழிகள் பொறிக்கப்பட்டுள்ளது! அவற்றைப் படித்தபடி உள்ளே சென்றால் வலது புறம்.... சத்திய மூர்த்தி சுவாமிகள் தன் வாழ் நாளின் இறுதியில் உபயோகித்த பல பொருட்கள் அங்கே காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அவர் அமர்ந்திருந்த நாற்காலி! இறுதியாய் அணிந்திருந்த காலணிகள்!

அந்த நாற்காலியில் அவருடைய திருவுருவப் படம் வைக்கப்பட்டுஉள்ளது! இங்கு வரும் அனைவரும் இவற்றை அந்த மகனாகவே பாவித்து, மனமுருக வணங்குகின்றனர்.

இந்த இல்லத்தின் மையக் கூடத்தில் சுமார் ஏழு அடி உயரம் உள்ள சத்தியமூர்த்தி சுவாமிகள் படமும் அருட்திரு வள்ளலார் சுவாமிகளின் படமும் அமைந்திருக்கிறது!

எல்லோரும் வணங்கிடும் பாகையில், ஒரு விநாயகர் சிலை....அதன் இரு புறமும் ஆளுயர முகம் பார்க்கும்

கண்ணாடிகள் அமைக்கப்பட்டுள்ளது!
எதிரில் வந்து நிற்போர், கண்ணாடியில் தன்னுருவைக் கண்டு, தன்னுள்ளே இருக்கும் இறையொளியை ஆத்மார்தமாகவே உணரும் வகையில் இந்த கண்ணாடிகள் அமைக்கப்பட்டுள்ளதோ என்ற எண்ணமே மேலோங்குகிறது! சத்திய மூர்த்தி சுவாமிகள், வள்ளலாரின் வழியைப் பின்பற்றியவர் என்பது கண் கூடாக தெரிகிறத் இதில் இன்னொரு கருதும் நிலவுகின்றது! வள்ளலாரின் மறு அவதாரமே சத்தியமூர்த்தி சுவாமிகள் என்பது பலருடைய கருத்தாக இருக்கிறது.

இதற்கு வலுசேர்க்கின்ற வகையில் ஒரு கையேட்டுப் பிரதியும் இங்கே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். சுவாமிகள் தன் கைப்பட பல தத்துவங்களை எழுதியுள்ள இந்த பிரதியின் இறுதியில் "இராமலிங்க அடிகள்" என கையெழுத்திட்டுள்ளார். இந்த கையெழுத்து, வள்ளலாரின் அசல் கையெழுத்தை ஒத்துள்ளதாக கண்டறிந்துள்ளார்கள்.

இவர் சில ஆண்டுகளுக்கு முன்னால் தான் ஐக்கிய மாகியிருக்கிறார். அதனால், சிறுவயது முதலே இவரை நன்கு அறிந்து, இவரோடு பழகி, இவருடைய அருமைகளை முற்றிலும் உணர்ந்து தெளிந்தவர்கள் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சத்திய மூர்த்தி சுவாமிகள் சித்த மருத்துவத்தில் தேர்ந்தவராக இருந்திருக்கிறார். மூலிகைகளின் ரகசியங்களை அறிந்து, அவற்றைக் கொண்டு பல அரிய நோய்களை குணப்படுத்தியும் உள்ளார்! அப்படி இவரிடம் சிகிச்சை பெற்றவர்களிடம் பணம் எதுவும் வாங்காமல், சேவையாகவே இதனை செய்தார் என்று இன்றும் பலர் சொல்கிறார்கள்.
இறுதி நாட்களில், இவர் தனது சீடர்களிடம் "எதிர்காலத்தில் உலகை அச்சுறுத்தும் சில தீராத நோய்களுக்குண்டான மருந்தை தயாரித்து வைத்திருக்கிறேன்; இதை இப்போது யாருக்கும் சொல்ல மாட்டான்! நான் இறைவனோடு ஐக்கியமாகி விட்டாலும் சரியான நேரம் வரும் போது அந்த மருந்தை உலகிற்கு அளிப்பேன்! அந்தக் காலம் வரும் வரை இந்த அறையை யாரும் திறக்கக் கூடாது" எனக் கூறியிருக்கிறார். இப்போதும் மருந்துகள் உள்ள அந்த அறை திறக்கப்படாமல் அப்படியே இருப்பது ஆச்சர்யம்!

தன்னைக் காணவரும் அடியார்களின் கண்முன்பே பல அற்புதங்களை நிகழ்த்தி, சித்து வேலைகளை சாதாரணமாக செய்யும் பழக்கம் உள்ளவராம் சத்தியமூர்த்தி சுவாமிகள் இப்போதும் அதையெல்லாம் சிலாகித்து சொல்வோர் அநேகர் உண்டு!
இந்த இல்லத்தில் ஆதரவில்லாமல் வருவோர், தவசிகள், துறவிகள் என பலருக்கும் பசிபோக்கும் பணியை செய்து வந்துள்ளார், சுவாமிகள்! பத்து நாள் வரை கெடாமல் இருக்கும் குழம்பினை மிகவும் ருசியாக தன் கையாலேயே செய்து, வருகின்ற அனைவருக்கும் உணவளிப்பாராம்.
ஒரு நாள்....
மதிய நேரம்! உணவும் தயாராகி விட்டது! நிறைய சிவனடியார்களோடு பற்பலரும் உணவருந்த காத்துக்

கொண்டிருக்கிறார்கள், சுவாமிகள் பூஜை செய்து, அனைவருக்கும் உணவளிக்க வேண்டும். அந்த நேரத்தில், தன் சீடரிடம், "இதோ...நான் போய் வருகிறேன். நான் வந்த பிறகு பூஜை செய்து உணவளிக்கலாம்," என்று சொன்ன சுவாமிகள் காணாமல் போய்விட்டார்! ரோஷமுள்ள ஒரு சில சிவனடியார்கள் கோபத்துடன் சென்று விட்டார்கள்.வெகுநேரம் கழித்து வந்த சுவாமிகள், யாரிடமும் எதுவும் சொல்லமால் பூஜை செய்ய, எல்லோரும் உணவருந்தினார்கள். கோபப்பட்டு சென்ற



சிவனடியார்களை அழைத்து, சமாதானம் செய்து உணவிட்டுள்ளனர்.

"ஏன் இந்த தாமதம்?" என சீடர் கேட்க...காரணத்தை விளக்கியுள்ளார் சுவாமிகள்! அதாவது, மருத்துவத்திற்கு தேவையான சில மூலிகைகளைப் பறித்து வர, தன்னுடைய சீடர் ஒருவரை மலை சார்ந்த காட்டுப் பகுதிக்கு அனுப்பினாராம் சுவாமிகள்!

அந்த சீடர் மூலிகைகள் பறித்துக் கொண்டு கிளம்புகின்ற சமயத்தில் காட்டு விலங்குகள் நாற்புறமும் சூழ்ந்து அவரது எதிரில் நிற்க, அந்த சீடர் உயிர்ப் பயத்தில் உறைந்து, "சுவாமி, என்னைக் காப்பாற்றுங்கள்; என வேண்டியுள்ளார். இங்கே இருந்த சுவாமிகளுக்கு பல மைல் தொலைவில் நடந்த அந்த சம்பவம் மனத் திரையில் தோன்றிடவே, சுவாமிகள், "நான் வந்தபிறகு உணவளிக்கலாம்" என்று கூறி கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த காட்டுக்கு சென்று, தன் தவ வலிமையால், விலங்குகளை விரட்டி விட்டு, சீடரைக் காப்பாற்றிருக்கிறார்.

சுவாமிகள் இதை சொல்லி முடிக்கவும் காட்டுக்கு சென்ற சீடர், பஸ் ஏறி வந்து சேர்ந்து,"சுவாமி அதற்குள்ளாக  வந்து விட்டீர்களா? எனக் கேட்கவும் சரியாகி இருந்ததாம்.

காலை, மாலை இருவேளையும் சுவாமிகளைக் காணவரும் பக்தர்கள், பூஜைகளில் கலந்து  கொள்வதும் பின்னர் சுவாமிகளோடு இருந்து அவருடைய ஞான மொழிகளைக் கேட்டு செல்வது வழக்கம்! ஒரு நாள்.....அப்படி வந்த பக்தர்கள் சிலர் சுற்றிலும் அமர்ந்திருக்க.... சுவாமிகள் தீடிரென தவநிலைக்கு சென்று, தியானத்தில் ஆழ்ந்து விட்டாராம் காரணம் புரியாமல் அனைவரும் அப்படியே அமர்ந்திருக்க, கண் விழித்த நமது சுவாமிகள், "சூரியன் நெருங்கவே முடியாத அளவுக்கு ரொம்ப உஷ்ணமாக கிரகந்தான் ஆனா, உள்ளே போய் பார்த்தா....ஏ/சி போட்ட மாதிரி அவ்வளவு குளிர்ச்சியா இருக்குது! இப்ப அங்க தான் போய்ட்டு வந்தேன்," என்றாராம்! எல்லோரும் பிரமித்துப் போய் இருக்கிறார்கள்! தான் இறைஜோதியோடு ஐக்கியமாகும் காலம் நெருங்குகையில் சுவாமிகள், தன் சீடர்களிடம், "விரைவில்

நான் சமாதி நிலையை அடைவேன்:
அப்போது நான் நிர்வாண கோலத்தில் இருப்பேன்; நான் முக்தியடைந்ததை முதலில் பார்த்து சொல்வது ஒரு பெண்மணியாகத் தான் இருப்பார்," என்று சொன்னாராம். அவர் சொன்னது போலவே, சுவாமிகளின் உடல், இங்குள்ள கழிவறையில் நிர்வாணமாக இருந்ததை, துப்புரவு பணி செய்யும் பெண்மணி தான் முதலில் பார்த்துவிட்டு சொன்னாராம்!
இந்த இல்லத்தின் பின் பகுதியில் இன்றும் அந்த கழிவறை புனித இடமாக வணங்கப்படுகிறது. இதன் எதிரிலே சத்தியமூர்த்தி சுவாமிகளின் ஜீவசமாதி, பளிங்கு கற்கள் கொண்டு பளபளப்பாய் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 15 ஆண்டுகள் தன் குடும்பம், மனைவி, பிள்ளைகளைத் துறந்து சத்தியமூர்த்தி சுவாமிகளுக்கு சேவை புரிந்து, அவருக்குப் பின்னர்..
இந்த ஜீவசமாதியை பராமரித்த சுவாமிகளின் சீடர் அய்யனார் சுவாமி சமீபத்தில் முக்தியடைந்தார்! அவருடைய ஜீவசமாதியும் சுவாமிகளின் ஜீவசமாதிக்கு அருகிலே அமைக்கப்பட்டு, இரண்டையும் பக்தர்கள் வணங்குகின்றனர். இறையொளியை தன்னகத்தே பெற்று, இறைவனின் திருவடிகளில் ஐக்கியமான சத்தியமூர்த்தி சுவாமிகளின் ஜீவசமாதியில் வேண்டுவோர்க்கு உடற்பிணியும் மனப்பிணியும் அகலுகின்றது!
ஒரு முறை ராஜ பாளையம் சென்று வரலாமே! ___

~ ரா. பன்னீர்செல்வம்




VOPEC
TURMERIC & BLACK PEPPER
HI-HEALTH FORMULA
Navel Chakra & Detoxifier
Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain,
heart and liver cells from ageing process
Call: 88702 88701

# ஆனந்தம் அள்ளி வழங்கும் சில ஆஞ்சநேயத் தலங்கள் !

"அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே
ஒன்றைத் தாவி
அஞ்சிலே யொன்று ஆறாத ஆரியர்க்காக
ஏகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கைக்
கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன்
நம்மை அளித்துக் காப்பான்"

எனும் சிறப்புப் பாடல் பெற்ற அனுமன் நாடெங்கும் உள்ள ஆலயங்களில் தனிச் சந்நிதி கொண்டும், சில இடங்களில் தனிக் கோயில் கொண்டும், இன்னும் பல திருக் கோயில்களில் உள்ள தெய்வங்களோடும் எழுந்தருளி பக்தர்களுக்கு நல்லாசிகள் வழங்கிக் கொண்டு இருக்கிறார்.
அவற்றுள் ஒரு சில ஆலய ஆஞ்சநேயர்களைப் பார்ப்போம்.

## சோளிங்கபுரம்

பிரசித்திப் பெற்ற காஞ்சிபுரத் தலத்தின் சமீபமாக உள்ள சோளிங்கபுரம் என்ற தலத்தில் உள்ள பெரிய மலையில் யோக நரசிம்மர், அமிருதவள்ளித் தாயாருடன் அருட்காட்சி அளிப்பார் அருகே அமைந்த சின்ன மலையில் அனுமன் வித்தியாச காட்சியாக சதுர்புஜங்களோடு, சங்கு, சக்கரம் பூண்டு யோகாசனத் திருக் கோலத்தில் ஸ்ரீ நரசிம்மரை பார்த்த வண்ணம் காட்சி தருவார்.
சோழ சிங்கபுரம், திருக் கடிகை என்றும் அழைக்கப்படும் இவ்வூர் அனுமனை பக்தர்கள் தங்கள் வேண்டுதல்கள் நிறைவேற தரிசிக்க திரண்டு செல்வர். குறிப்பாக பேய், பிசாசு, பில்லி, சூன்யத்தால் அவதிப்படுவோர் இங்கு அவை நீங்க அதிக அளவில் வருகிறார்கள்.



## அனந்தமங்கலம்

த்ரீ நேத்திரமும், எட்டு கைகளில் ஆயுதங்களும் பூண்ட அனுமன் மயிலாடுதுறை, தரங்கபடி சாலையில் உள்ள திருக்கடையூர் சமீபத்தில் அமைந்த தனி ஆலயத்தில் குடி கொண்டு அருள் பாலிக்கிறார். இவர்

திரு நாமம் "த்ரி நேத்திர ஆஞ்சநேயர் என்பது.
நவக் கிரகங்கள் அத்தனையும் "அருளும் பிராத்தனைகளை, இந்த ஆஞ்சநேயரிடம் முறையிட, அவைகள் நிறைவேறிவிடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

## தஞ்சாவூர்

தஞ்சை நகர மேலராஜ வீதி, வடக்கு ராஜ வீதி இவை இணையும் வடக்கு மூலையில் மூலை அனுமார்" என்று அழைக்கப்படும் ஆஞ்சநேயர் தனிக் கோயில் கொண்டுள்ளார். மைல் கல்லில் வாசம் புரியும் இந்த ராம் தூதர் சஞ்சீவி மலையை பெயர்த்து வந்தவராக அறியப்படுகிறார். இவருடைய வாயில் சனீஸ்வர பகவான் உள்ளிட்ட அனைத்து நவக்கிரகங்களும் குடி கொண்டுள்ளதாக ஐதீகம். தல விருட்சம் கொண்ட ஒரே அனுமன் கோயில் இது மட்டுமே எனப்படுகிறது.
பிரிந்து வாழும் தம்பதியர்கள் மீண்டும் ஒன்று சேர 108 அகல் தீபமேற்றி இங்கு பூஜை புரிகிறார்கள். சூரிய, சந்திர கிரகண தோஷ முடையோர் மூலை அனுமாரை தரிசித்தால் அவை அழிந்து விடும் எனப்படுகிறது.

## பட்டீஸ்வரம்



அஷ்டமச் சனி, அர்த்தாஷ்டம சனி, ஜென்ம, கண்டச் சனியால், அவதியுறுவோரின் சகல தோஷங்களும் நீங்க, கும்பகோணம் வட்டத்தில் உள்ள பட்டீஸ்வரம் தலம் சமீபமுள்ள கோபிநாத விண்ணகரம் திருத்தலம் செல்லலாம். இந்தப் பெருமாள் திருத்தலத்தில் அனுமன் இரட்டை ஆஞ்ச நேயர் வடிவங்களில் அருள் புரிகிறார்.
இத்தலத்தில் தான் ஸ்ரீமன் நாராயணன் ஆஞ்சநேயருக்கு ஸ்ரீ ராம பிரானாகவே காட்சி அருளியுள்ளார்.

## திருநெல்வேலி

நெல்லை மாவட்டத்தில் உள்ள தென்காசி வட்டத்தில் அடங்கும் கிருஷ்ணாபுரம், செங்கோட்டை சாலையின் சமீபம் சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ள ஒரு கிராம ஆலயத்தில் குடி கொண்டுள்ளார். ஸ்ரீ அபயஹஸ்த ஜய வீர ஆஞ்சநேயர்". அக்கோலத்தில் தேவேந்திரன் கொண்ட பிரம்ம தோஷம் நீங்கப் பெற அருளிய இந்த அனுமன், அதே போன்ற தோஷங் கொண்ட பக்தர்கள் தன்னை வழிபட, அவர்களுக்கும் அருள் புரிவார் என்கிறது தல புராணச் செய்தி.

## ஆம்பூர்

பதினோரு அடி உயரம் பூண்ட ஆஞ்சநேயர், வேலூர் மாவட்டத்தைக் சேர்ந்த ஆம்பூர் தலத்தில் திருக் கோயில் கொண்டு பக்தர்களின் அனைத்து வேண்டுகோளையும் நிறைவேற்றி வருகிறார்.
இவ்வாலயத்தில் அனுமன் சனீஸ்வரரை தன் காலில் மிதித்த கோலத்தில் திருக் காட்சியளிப்பார்.
இந்த ஆஞ்சநேயருக்கு தீபமேற்றி வழிப்பட்டால், அவரை சரண்புகும் பக்தர்களின் எத்தகையத்

துன்பத்தையும் போக்கி அருள்வார் எனக் கூறப்படுகிறது.

## நல்லாட்டூர்

விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக திகழ்ந்த கிருஷ்ண தேவராயரின் ஆன்மீக குருவாக இருந்தவர் மகான் ஸ்ரீ வியாசராஜ தீர்த்தர் என்பவர். அவர் தனது கைகளாலேயே ஆஞ்சநேயருக்கு 732 திருச் சந்நிதிகள் அமைக்கும் நோக்கங் கொண்டு, நாடெங்கும் கால் நடையாகவே பயணம் செய்தார். அந்த 732 ல் ஒன்றாக விளங்குவதே நல்லாட்டூர் "ஸ்ரீ ஜெயவீர மங்கள ஆஞ்சநேயர் திருக்கோயிலில் உள்ள அனுமன்.

அப்படி அந்த மகான் தன் திருக் கரங்களால் பிரதிஷ்டை செய்த இந்த அனுமாரை வழிபடுவோரின் பிரார்த்தனைகள் அத்தனையும் நிறைவேற்றி விடுவார் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.
நல்லாட்டூர் திருத்தலம் திருத்தணி தலத்திற்கு அருகில் குசஸ்தலை ஆற்றின் கரையில் உள்ளது.

## வேலூர்

சக்கரவர்த்தி ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் தன் ஆட்சிக்காலத்தில் 108 ஆஞ்சநேயர்களை பிரதிஷ்டை செய்ய நேர்ந்து கொண்டார். அந்த 108ல் ஒன்றாக விளங்குகிறது வேலூர் மாவட்டத்தில் அடங்கும் திருப்பத்தூர் டவுனில் உள்ள 12 அடி உயரத்திருமேனி கொண்டு அருள் பாலிக்கும், ஒரே கல்லில் உருவான ஸ்ரீ வீர ஆஞ்சநேயர்
ஞாயிறு அன்று ராகு காலத்தில் விசேட அர்ச்சனை பெறும், இந்த அனுமனை பூஜித்து வேண்டுவோர் கொண்ட திருமணத் தடைகள், தீரா நோய்கள் விலகுவதோடு, அவர்களுக்கு அனைத்து பாக்கியங்களும் கிடைக்கும் எனப்படுகிறது.
இப்படி ஆஞ்சநேயர் புகழ்பாடும் எத்தனையோ புராதன ஆலயங்களும், தற்காலத்தில் உருவான அனுமன் திருக் கோயில்களும் நம் நாடெங்கும் பரவிக் கிடக்கின்றன.

**"அனுமனை நம்பினோர் கைவிடப்படார்!"**

~ கீதாமணி



Special Birthday Ritual Packages for You

Get 40% OFF

Call: 88702 88701

# ஜூலை 1 – 15 மாத ராசிபலன் 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

## மேஷம்



- குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் அமைதி நிலவும்.
- இந்த மாதம் குடும்ப உறவுகளுக்கு இடையேயான உறவு நிலை சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.
- நல்ல மனிதர்களின் நட்பு மூலம் உத்தியோகத்தில் ஆதாயங்களைப் பெறுவீர்கள்.
- உத்தியோகம் செய்யும் இடத்தில் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் வந்து போகும். எனவே நீங்கள் கவனமுடன் செயல்பட வேண்டும்.
- கூட்டுத் தொழில் மூலம் நீங்கள் ஒரு புதிய திருப்புமுனையைக் காண்பீர்கள். புதிய கூட்டாளிகளைக் கண்டு கொள்வீர்கள்.
- புதிய தொழிலை மேற்கொள்வதற்கு இது ஏற்ற மாதம். பயணங்கள் மூலம் புதிய தொழில் வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் மனதில் துடிப்பும் உற்சாகமும் காணப்படும். அதிக பணிகள் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். கழுத்து வலி மற்றும்முதுகு வலி போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## ரிஷபம்



- திருமணமான தம்பதிகளுக்கு தாம்பத்யத்தில் நல்லிணக்கம் கூடும்.
- அதிக பணிகள் காரணமாக உங்களால் குடும்பத்திற்கென அதிக நேரத்தை ஒதுக்க இயலாது.
- வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் நீங்கள் சில காலம் உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- உத்தியோகம் காரணமாக சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.
- பயணத்திற்காகவும் நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரும்.
- மன அழுத்தம் காரணமாக மற்றும் தவறான உணவு முறை காரணமாக அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மற்றபடி பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படாது.

# மிதுனம்



- கணவன் மனைவிக்கு இடையே இணக்கம் கூடும்.
- புதிய வீடு மாறுவதற்கு இந்த மாதம் சிறந்த மாதமாகும்.
- குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். பணம் மற்றும் பொது விஷயங்கள் குறித்து இதுவரை குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் யாவும் சீராகும்.
- புதிதாக வேலைக்கு சேர்ந்திருப்பவர்களுக்கு சிறிது பதட்டநிலை இருக்கும். வெளியிடங்களுக்கு சென்று வேலை பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.
- புதிய தொழிலில் முதலீடு செய்வீர்கள். அல்லது பழைய தொழிலை விரிவாக்கம் செய்வீர்கள்.
- பழைய சொத்துக்கள் அல்லது பழைய வண்டி வாகனகங்கள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.
- திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்களுக்கான விரயங்கள் ஏற்படலாம்.
- மாணவர்கள் படிப்பில் கவனம் சிதறும் வாய்ப்புகள் உள்ளது. பொறுப்புடன் படிப்பது நலம்.
- தலை சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வர வாய்ப்புள்ளது. துரித உணவுகளை தவிப்பது நன்மை பயக்கும்.

# கடகம்

- திருமணமானவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும்.



- நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- கலை மற்றும் இசையின் மீது ஆர்வம் கூடும்.
- தங்களின் வேலை மற்றும் நிதிநிலையில் முக்கிய மாறுதல்கள் ஏற்படும்.
- பணியிடத்தில் பதவி உயர்வு கிட்டும். அதன் மூலம் உங்கள் வருமானம் உயரும்.
- இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும்.
- இந்த மாத பிற்பகுதியில் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும்.
- மாணவ மாணவியர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.
- தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# சிம்மம்



- கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் வந்து போகும். பேச்சில் கவனம் தேவை.
- குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் அன்பும் அரவணைப்பும் இருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வார்கள். உங்கள் பணியிடத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வீர்கள். அதில் சிறந்து விளங்குவீர்கள்.
- வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.
- இந்த மாதம் உங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்க வாய்ப்புகள் உண்டு.
- உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக கல்வி பயில்வார்கள்.
- இந்த மாதம் நீங்கள் குடும்பத் தொழிலை விரிவு படுத்த நீங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.
- இந்த மாதம் புதிய ஆடைகள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.
- மாசு காரணமாக ஒவ்வாமை அல்லது ஆஸ்துமா போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல்நலனில் அக்கறை தேவை.

# கன்னி




- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும்.
- வீட்டு பெரியவர்களிடம் கருத்து மோதல்கள் வரலாம். வாக்கில் கவனம் தேவை.
- தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை.
- உத்தியோகத்தில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- சுய தொழில் செய்பவர்கள் ஒரே தொழிலில் முதலீடு செய்வது கூடாது. பிரித்து முதலீடு செய்வதன் மூலம் உங்கள் தொழில் விரிவதற்கான வாய்ப்பு உள்ளது.
- வெளிநாட்டு தொடர்பான தொழில் நடத்துபவர்களும் சிறந்த ஆதாயம் காண்பார்கள்.
- மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் பளிச்சிடுவார்கள். சிலருக்கு கல்வி உதவிப் பணம் கிடைக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவார்கள். இந்த மாதம் மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் மாதமாக இருக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம். ஆரோக்கிய உணவு உண்பதின் மூலமாக வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம்.

# துலாம்



- காதல் உறவில் மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை.
- திருமணமான தம்பதிகளிக்கு இடையே இணக்கம் அதிகரிக்கும்.
- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.
- உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் தன நிலையில் ஏற்றம் ஏற்படும்.
- கூட்டுத்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.
- வியாபாரத்தில் தன வரவு அதிகரிக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் இருக்கும்.
- தொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவது ஏற்றத்தை கொடுக்கும்.
- ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆன்மீகத்திற்காக பயணம் மேற்கொள்வீர்கள்.
- பள்ளியில் பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.

# விருச்சிகம்



- திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும்.
- வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனம் தேவை.
- உத்தியோகம் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- பொறியியல் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வுகளை எழுதி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.
- ஆராய்ச்சி படிப்பு படிக்கும் மாணவர்கள் படிப்பில் வெற்றி பெறுவார்கள்.
- உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல்நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம்.

# தனுசு



- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும்.
- உத்தியோகத்தில் பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.
- பணியிடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவார்கள்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.
- தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடும் முன் கவனம் தேவை.
- மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள். சில தடைகள் இருந்தாலும் இந்த மாத இடைப் பகுதியில் மீண்டும் பிரகாசிக்க வாய்ப்பு உண்டு.
- பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை இருக்கும். உணவு முறையில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

# மகரம்



- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும் என்றாலும் சில கருத்து வேறுபாடுகள் காரணமாக வாக்குவாதங்கள் எழும்.
- மாத மத்தியப் பகுதியில் குடும்ப உறுப்பினர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடினமாக உழைப்பதன் மூலமும் சக பணியாளர்களிடம் நல்லுறவு பேணுவதன் மூலமும் பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடத்தில் நீங்கள் உங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றுவீர்கள்.
- தகவல் தொடர்புத்துறை, மற்றும்  ஐடி போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு வேலை பளு கூடும்.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்கள் நாடி வரும். அதன் மூலம் நீங்கள் ஆதாயமும் வெற்றியும் பெறுவீர்கள்.
- வீடு மராமத்துப் பணி மற்றும் வீட்டிற்கு வெள்ளை அடித்தல் போன்ற வகையில் செலவுகளை மேற்கொள்வீர்கள்.
- ஒற்றை தலைவலி போன்ற உடல் உபாதைகள் ஏற்படும். சரியான நேர இடைவெளியில் உணவை உட்கொள்வது நன்மை பயக்கும்.

# கும்பம்



- குடும்பத்தில் சில சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- உத்தியோகத்தில் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியிடத்தில் புதிய பொறுப்புக்கள் வழங்கப்படும். உங்கள் செயல் திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.
- சுயதொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். .
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இந்த மாதம் நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- வெளிநாட்டில் கல்வி பயில நினைக்கும் மாணவர்கள் சில தாமதங்களை சந்திக்க நேரும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.

# மீனம்



- திருமணம் சம்மந்தப்பட்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.
- நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்ப உறவுகள் சீராகவும் அமைதியாகவும் இருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களின் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
- அரசு பணியில் இருப்பவர்களுக்கு இந்த மாதம் சிறப்பாக இருக்கும். தன்னுடன் பணிபுரிபவர்களிடம் சுமூகமான உறவு ஏற்படும்.
- சுயதொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.
- படைப்புத் துறையில் இருப்பவர்கள் தங்கள் துறையில் படைப்பாற்றல் மற்றும் புத்திசாலித்தனத்தின் மூலம் சாதிப்பார்கள்.
- பங்கு வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.
- அஜீரணம் சம்பந்தமான உடல் உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உண்ணும் உணவில் கவனம் தேவை.